www.padippakam.com


# வானவில்

VAANAVIL
ISSUE – 53 MAY 2015

இதழ் - 53 வைகாசி 2015


# மக்கள் விரோத – தேச விரோத ஐ.தே.கவுக்கு எதிரான சக்திகள் ஐக்கியப்பட வேண்டும்!

இவ்வருடம் ஜனவரி 08ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று புதிய அரசாங்கம் அமைந்த பின்னர், நாட்டின் ஆட்சி முறையிலும், மக்களின் நாளாந்த வாழ்விலும் பல தலைகீழ் மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. மாற்றங்கள் என்பது இயல்பானவையும், தவிர்க்க முடியாதவையும் என்பது நம் எல்லோருக்கும் தெரியும். எனவே ஒரு தனி மனிதனும் சரி, ஒரு நாடும் சரி, மாற்றங்களை ஒருபோதும் தவித்துவிட்டு வாழ முடியாது.

ஆனால் அந்த மாற்றங்கள் நல்ல வழியில் நடந்தால் மட்டுமே அதனால் பயன் உண்டு. அப்படி நல்ல வழியில் மாற்றங்கள் நடப்பதற்கு மனிதப் பிரயத்தனம் மிக அவசியமானது. அப்படிப் பார்த்தால் நமது நாட்டில் ஜனவரி 08ஆம் திகதி நடைபெற்ற ஆட்சி மாற்றம் நல்ல திசை வழியில் நடைபெற்றுள்ளதா என்பதை ஆராய்ந்து பார்ப்பது அவசியமானது.

ஜனவரி 08ஆம் திகதி ஆட்சி மாற்றத்தைச் செய்ய வேண்டும் என்று கோரியவர்கள், 'நாட்டில் சர்வாதிகாரம் தலைதூக்கியுள்ளது. ஒரு குடும்பத்தின் ஆட்சி நடைபெறுகிறது. இலஞ்சமும் ஊழலும் தலைவிரித்தாடுகின்றது. இதற்கெல்லாம் காரணம் நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதி முறை இருப்பதும், அதை ஜனாதிபதி பதவியில் இருப்பவர் பிரயோகிப்பதும்தான் காரணம்' எனக் கூறியே




பொதுமக்களிடம் வாக்குக் கேட்டனர்.

அவர்களது வேண்டுகோளில் ஏமாந்த பொதுமக்கள் அன்றிருந்த ஜனாதிபதிக்கு அளித்ததை விட சற்று அதிகமான வாக்குகளை எதிரணி வேட்பாளரான மைத்திரிபால சிறிசேனவுக்கு அளித்து அவரை நாட்டின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்தனர். ஜனவரி 08இல் நடைபெற்றது ஜனாதிபதித் தேர்தல் ஆகையால், மக்கள் ஜனாதிபதியை மாற்றினார்களேயொழிய, பாராளுமன்றத்தை மாற்றவில்லை. ஜனாதிபதித் தேர்தலுடன் சேர்த்து அதற்கான வேண்டுகோளும் விடுக்கப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து நாட்டின் ஆட்சியிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

உண்மையில் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு முன்னால் இரண்டு தெரிவுகளே இருந்தன. ஒன்று இன்னமும் ஆயுட்காலம் முடிவடையாமல் உள்ள பாராளுமன்றத்தையும், அந்தப் பாராளுமன்றம் தெரிவு செய்த, ஏறத்தாழ மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் உள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தையும் தொடர்ந்தும் செயற்பட அனுமதிப்பது. இரண்டாவது தெரிவு, பாராளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தலை நடாத்தி, அதில் தெரிவாகும் புதிய அரசாங்கத்தைச் செயல்பட அனுமதிப்பது. ஆனால் ஜனாதிபதி மைத்திரி இந்த இரண்டில் எதுவொன்றையும் செய்யவில்லை. அந்த இடத்தில்தான் அவர் நாட்டை அழிவுக்கு இட்டுச் செல்லும் பெருந்தவறு ஒன்றை இழைத்துள்ளார்.

அவர் தன்னை ஜனாதிபதியாகத் தெரிவு செய்வதில் விட்டுக் கொடுப்பையும், ஆதரவையும் வழங்கிய ஐக்கிய தேசியக் கட்சிக்கும், அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் நன்றிக்கடன் செலுத்துவதற்காக, நாட்டின் ஜனநாயக மரபையும், நடைமுறைகளையும் மீறி, எந்த நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதாக தேர்தல்

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க..

நூறு சிந்தனை மலரட்டும்

படிப்பகம்

www.padippakam.com

# மரணங்களின் அஸ்தமனம்

1971 மற்றும் 1989 ஆண்டுகளில் ஜே.வி.பியின் கிளர்ச்சிகளின் போது ஏற்படுத்தப்பட்ட அழிவுகளை கணக்கில் எடுக்காது, இலங்கையில் 2009 மே மாதத்தில் முடிவுக்கு வந்த அரசு — புலிகள் யுத்தத்தினை மாத்திரம் நோக்குவோமானால், எல்லா இனங்களையும் சேர்ந்த ஏறத்தாள ஒரு இலட்சம் வரையிலான மனித உயிர்கள் பலி கொள்ளப்பட்டதும், பல இலட்சக் கணக்கானவர்களின் இடப்பெயர்வுகளும், மதிப்பிட முடியாத சொத்துக்களின் அழிவும் இடம்பெற்றுள்ளன. இதற்கு இலங்கை அரச படைகளும், அரச படைகளை எதிர்த்துப்போராடிய ஆயுதம் ஏந்திய தமிழ் இயக்கங்களும், இந்திய அமைதிப்படையுமே பொறுப்பாளிகள் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. அரச படைகளின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் என்றைக்கும் பொறுப்புக்கூற இலங்கை அரசு உள்ளது. ஆனால் தமிழ்த்தேசிய இயக்கங்களினதும் இந்திய அமைதிப்படையினதும் நடவடிக்கைகளுக்கு பொறுப்புக்கூற இன்று எவருமே இல்லை.

யுத்த முனையில் பலியானவர்கள் மற்றும் யுத்தத்தின் நடுவில் சிக்கி கொல்லப்பட்ட பல்லின பொதுமக்கள் தவிர 'என்னுடன் உடன்பாடு இல்லாதவன் எனது எதிரியே' என்ற கோட்பாட்டில் யுத்தத்தில் ஈடுபட்ட அனைத்துத் தமிழ் தரப்பினராலும் 'மரண தண்டனை' என்ற பெயரில் பல ஆயிரக்கணக்கானவர்களின் உயிர்கள் மூன்று தசாப்த காலமாக பறிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றிற்கு அவ்வப்போது தமது தேவை கருதி உரிமைகள் கோரப்பட்டும் இருக்கின்றன. அதேவேளை உரிமை கோரப்படாமல், ஆனால் 'இந்தக் கொலையை எந்த தரப்பு செய்திருக்கக்கூடும்' என்பது மிகவும் வெளிப்படையாக தெரியும் வண்ணமும், சில கொலைகளின் உண்மையான சூத்திரதாரிகள் எமது பொதுவான ஊகங்களை பொய்ப்பிக்கும் வகையிலும், பல ஆண்டுகளாய் இன்னமும் மர்மம் நீடிக்கும் கொலைகள் நிகழ்த்தப்பட்டும், பலர் காணாமலும் போயுள்ளனர். இவ்வாறு கொல்லப்பட்டோ அல்லது காணாமல் போனவர்கள் சிலருக்கு அவ்வப்போது நினவாஞ்சலிகள் செய்யப்படுகின்றன. ஆனால் பெரும்பாலானோர் நினைவு கூரப்படுவது இல்லை. இதனால் எமது நினைவுகளிலிருந்து மறைந்த வண்ணம் உள்ளனர். அத்துடன் மரணித்தவர்களுக்கும் காணாமல் போயுள்ளவர்களுக்கும் பொறுப்புக்கூறவும் இன்று எவருமே இல்லை.

ஆரம்பகாலத்தில் புளொட் இயக்கத்திலிருந்து, பின்னர் தமிழ் – ஆங்கில பத்தி ஊடகவியலாளராக உருவெடுத்து, இறுதியில் புலிகளின் முகாமுக்குள் சரணடைந்த தர்மரத்தினம் சிவராம் கொலை செய்யப்பட்டு பத்தாவது ஆண்டினை நினைவுகூரும் கூட்டங்கள் மட்டக்களப்பிலும் சென்னையிலும் நடைபெற்றதுடன், சில தமிழ்த்தேசிய மற்றும் புலிகள் சார்பு ஊடகங்களும் நினைவுக்குறிப்புகளை வெளியிட்டு இருந்தன. சிவராம் கடந்துவந்த பாதையை முழுமையாக சொல்லப்படாது, அவர் ஒரு 'சிறந்த' தமிழ் – ஆங்கில பத்தி ஊடகவியலாளராக அல்லது புத்திஜீவியாக சித்தரிக்கப்பட்டு வருகின்றார்.

1983–1987 காலப்பகுதியில் தமிழ்நாட்டில் புளொட்டின் ஆயுதப்பயிற்சி முகாம்களில் சில வதைமுகாம்களாக உருமாறி சித்திரவதைகளும் கொலைகளும் நடந்தேறிய போது, சிவராம் அந்த இயக்கத்தின் முன்னணி நபராக இருந்தவர். இவர் ஒருபோதும் புளொட்டினுள் நிகழ்ந்த அராஜகங்களை எதிர்த்துப் போராடியவரல்ல. மாறாக, புளொட்டின் மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்பானவர்களோடே, புளொட் இயக்கம் சிதையும் வரைக்கும் தன்னை வலுவாக இணைத்து இருந்தவர். புளொட்டின் ஜனநாயக மீறல்களை அம்பலப்படுத்தி 'புதியதோர் உலகம்' வெளிவந்த பின்னரும், புளொட்டின் தலைவர்களில் ஒருவரான சந்தியார் புளொட் இயக்கத்தால் கடத்தப்பட்டு கொல்லப்பட்ட பின்னரும் அந்த இயக்கத்தை விசுவாசித்தவர். மேலும் புளொட் இயக்க உறுப்பினர்களான அகிலன், செல்வன் ஆகியோரைக் கடத்தி மூதூரில் கொன்று புதைப்பதற்கு நேரடியாக இவர் துணைபுரிந்தவர்.

புலிகளுக்கும் புளொட்டிற்கும் தாயாதிப்பகை. இதனால் 1982இல் புளொட்டின் ஸ்தாபகரில் ஒருவரான சுந்தரம் புலிகளினால் கொல்லப்பட்டார். பின்னர் 1986இல் புளொட் இயக்கம் புலிகளால் தடைசெய்யப்பட்டதோடு பல நூற்றுக்கணக்கான புளொட் உறுப்பினர்கள் கடத்தப்பட்டுக் கொல்லப்பட்டனர். இவ்வாறு எல்லா தமிழ் ஆயுத இயக்கங்களிலும் பல ஆயிரக்கணக்கானவர்களை கொன்று குவித்து புலிகள் ஒரு பெரும் பாசிச இயக்கமாக விருட்சம் பெற்ற பின்னரே, புலிகளுக்குள் சிவராம் பிரவேசித்தார்.

2004 இல் புலிகளிலிருந்து கருணா பிரிந்தபோது கருணாவின் ஆலோசகர் வடிவத்தில் சிவராம் மட்டக்களப்பில் நின்றார். ஆனால் கருணா பிரிந்து ஒரு வாரத்தின் பின்னர் வன்னியில் கால் பதித்த சிவராம், அங்கிருந்து கருணாவின் பிளவை எதிர்த்து அறிக்கைவிட்டார். இதுதான் அவரது குத்துக்கரணத்திற்கு மேல் குத்துக்கரணம் அடிக்கும் தன்மைக்கு ஒரு சிறந்த உதாரணம்.. இவரது இந்த துரோகச் செயலுக்காக கருணா அணியினரே சிவராமை சுட்டுக்கொன்றதாக பல ஊடகவியலாளர்கள் பத்தி பத்தியாக எழுதினார்கள்.

தமிழ் தேசிய விடுதலைப் போரட்ட காலத்தில் இயக்கங்களினுள் இழைக்கப்பட்ட, இயக்கங்களிடையேயான மோதல்களில் நிகழ்த்தப்பட்ட அராஜகங்கள் யுத்தக்குற்றங்களே. சிவராம் போன்ற மோசமான யுத்தக்குற்றவாளியை ஏதோ சில சக்திகள் நினைவுகூர திட்டமிட்டு செயற்படுகின்றன. ஆனால் தமிழீழ ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட இயக்கங்களினால் கொல்லப்பட்ட, கடத்தப்பட்டு காணாமல்போன பல்லின மக்கள், போராளிகள், பத்திரிகையாளர்கள், அரச பணியாளர்கள், சமூக சேவையாளர்கள் கல்விமான்கள், அனைவரின் நினைவாஞ்சலிகளை ஒவ்வொன்றாக அனுஸ்டிக்காவிடினும், அவர்களை நினைவில் வைத்திருப்பதற்கு இன்று மிகச் சொற்பமானோரே எஞ்சியிருக்கின்றனர்.


## வானவில்

**தொடர்பு முகவரி:** 'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com

இதுவரையில் வெளிவந்த வானவில் இதழ்களை **http://manikkural.wordpress.com/** என்ற இணையத்தள முகவரியில் வாசிக்கலாம்.


## *புரட்சிகர மேதின வாழ்த்துக்கள்!*

***'வானவில்' வாசகர்களுக்கும், உலகம் முழுவதுமுள்ள உழைக்கும் மக்களுக்கும் எமது புரட்சிகர மேதின வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.***


படிப்பகம்

# சீனா தொடங்கிய புதிய ஆசிய வங்கிக்கு ஆதரவு பெருகுகின்றது!



இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் உலகம் இரண்டு எதிரெதிர் முகாம்களாகப் பிரிந்தது. ஒன்று முதலாளித்துவ முகாம், மற்றது சோசலிச முகாம்.

1990இல் சோவியத் யூனியன் தலைமையிலான சோசலிச முகாம் வீழ்ச்சியடைந்தது. அதன்பின்னர் முதலாளித்துவ அமைப்பு முறையே சிறந்தது, நிரந்தரமானது என, முதலாளித்துவ தத்துவவியலாளர்களும், 'அரசியல் அறிஞர்களும்' பிரச்சாரம் செய்ய ஆரம்பித்தனர்.

ஆனால் அவர்களது பிரச்சாரங்களை மேவிக்கொண்டு, முதலாளித்துவ உலகம் முன்னொருபோதும் இல்லாத பொருளாதார நெருக்கடியில் வீழ்ந்தது.

முதலாளித்துவ சமூக அமைப்பில் பணமே சகலதினதும் அச்சாணி. அந்தப் பணத்தை உலகம் முழுவதும் மூன்று பெரும் நிதி நிறுவனங்களே கட்டுப்படுத்தி வருகின்றன. அவையாவன, உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி என்னாவாகும். இவை மூன்றும் உலகின் வல்லமை படைத்த அமெரிக்காவின் ஆதிக்கத்தின் கீழ் உள்ளன. இவைகளிடம் உதவி பெற்ற வளர்முக நாடுகள், மார்வாடியிடம் வட்டிக்குப் பணம் பெற்றவன் நிலையில் சீரழிந்து போனதுதான் வரலாறு.

எனவே இந்த நிதி அமைப்புகளின் மீது அமெரிக்காவுக்கு இருக்கும் ஆதிக்கத்தைத் தகர்ப்பதற்காகவும், அமெரிக்க டொலரின் ஏகபோகத்துக்கு முடிவு கட்டுவதற்காகவும், உலக சனத்தொகையில் 40 வீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முன்னணி நாடுகளான சீனா, ரஸ்யா, இந்தியா, பிரேசில், தென்ஆபிரிக்கா என்பன இணைந்து 'பிரிக்ஸ்' (BRICS) என்றொரு அமைப்பை உருவாக்கின. அந்த அமைப்பு புதிய சர்வதேச வங்கி ஒன்றையும் உருவாக்கியதுடன், அமெரிக்க டொலருக்கு மாற்றீடாக புதிய நாணயம் ஒன்றைப் புழக்கத்துக்குக் கொண்டு வருவது குறித்தும் ஆராய்ந்து வருகிறது. அந்த அமைப்பின் தலைமைப் பொறுப்பை சுழற்சி முறையில் தற்போது இந்தியா வகித்து வருகிறது.

## சமரன்

இதைவிட, சீனா தற்பொழுது தனியாக பிறிதொரு வங்கியொன்றையும் ஆரம்பித்துள்ளது. ஆசிய உள்கட்டுமான முதலீட்டு வங்கி (Asian Infrastructure Investment Bank – AIIB) எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த வங்கியை சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் (Xi Jinping) கடந்த ஒக்ரோபரில் முறைப்படி ஆரம்பித்து வைத்துள்ளார். அத்துடன் அதன் ஆரம்ப அடிப்படை நிதியாக 50 பில்லியன் டொலர்களை சீனா வைப்புச் செய்து அதன் 50 வீதமான பங்குகளைத் தன்வசம் வைத்துள்ளது. ஆசிய நாடுகளின் வளர்ச்சித் திட்டங்களுக்கு கடன் உதவிகளை வழங்குவதே இந்த வங்கியின் நோக்கம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் இந்த நடவடிக்கை ஏற்கெனவே உள்ள உலகின் மூன்று பெரும் நிறுவனங்களுக்கும், அவற்றின் மீது அமெரிக்கா செலுத்தி வரும் ஆதிக்கத்திற்கும் பெரும் சவாலாக அமையும் என சர்வதேச பொருளாதார – அரசியல் வல்லுனர்கள் ஆரூடம் கூறியுள்ளனர். அவர்களின் கூற்றை நிரூபிப்பது போல, அமெரிக்காவின் நெருங்கிய நேசநாடுகளிடமிருந்தே இந்த வங்கிக்கு ஆதரவுக்கரங்கள் நீள ஆரம்பித்துள்ளன.


சீனாவுடன் பலவிதமான பிரச்சினைகளைக் கொண்டுள்ள, ஆசியாவில் அதன் போட்டி நாடான யப்பானின் நிதியமைச்சர் Taro Aso அவர்களே, சமீபத்தில் ஒரு ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் கருத்துத் தெரிவிக்கையில், 'யப்பான் பொருத்தமான சந்தர்ப்பத்தில் இந்த வங்கியில் இணைந்து கொள்ளும்' எனத் தெரிவித்திருக்கிறார்.

அதுதவிர, சீனாவின் புதிய வங்கியில் இணைந்து கொள்வதற்கு பிரித்தானியா மார்ச் 13ஆம் திகதியே விண்ணப்பம் செய்துவிட்டது. அதைத் தொடர்ந்து ஐரோப்பாவின் முன்னணி நாடுகளான பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, சுவிற்சலாந்து என்பனவும்

**தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க..**

www.padippakam.com

# தமிழ் மக்களின் விமோசனத்துக்கு புதிய பாதை




பொருளாதாரப் பிரச்சினைகளால் நாட்டு மக்கள் அனைவரும் பாதிப்புக்கு உள்ளாகின்ற அதேவேளை, தமிழ் மக்கள் தேசிய இனப் பிரச்சினை சம்பந்தமான பாதிப்புக்களுக்கும் உள்ளாகின்றனர். சுதந்திரத்துக்கு முந்திய குடியேற்றத் திட்டங்களுடன் இனப் பிரச்சினை ஆரம்பமாகிய போதிலும், 1947ம் ஆண்டு நடைபெற்ற முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் அது பிரதான பேசுபொருளாக இருக்கவில்லை. வடக்கில் அமோக வெற்றியீட்டிய தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைமை, டீ.எஸ்.சேனநாயகவின் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் இணைவதற்கான முயற்சியை முன்னெடுத்த கட்டத்திலேயே இனப் பிரச்சினையின் தீர்வு பற்றிய பேச்சு எழுந்தது. அப்போதுதான் சமஸ்டிக் கோரிக்கை தமிழ் அரசியல் அரங்குக்கு வந்தது.

ஐ.தே.கட்சியின் அரசாங்கத்தில் இணைவதற்கான சில நிபந்தனைகளை அப்போது அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த எஸ்.ஜே.வி.செல்வநாயகம் கட்சிக்குள் முன்வைத்தார். சமஸ்டி அடிப்படையிலான புதிய அரசியலமைப்பைத் தயாரிப்பதற்காக அரசியலமைப்பு நிர்ணய சபையை நிறுவ வேண்டும் என்பது அந்த நிபந்தனைகளுள் பிரதானமானது. இக்கோரிக்கையை டொக்டர் ஈ.எம்.வி.நாகநாதன் 1951 மார்ச் 14ந் திகதி செனெற் சபையில் தனிநபர் பிரேரணையாக முன்மொழிந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி பெரும்பான்மைத் தீர்மானத்தின் அடிப்படையில் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் நிபந்தனைகளை நிராகரித்து ஐ.தே.கவின் அரசாங்கத்தில் இணைந்தது. இந்த முடிவை ஆட்சேபித்து எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் தலைமையில் கட்சியிலிருந்து வெளியேறித் தமிழரசுக் கட்சியை ஆரம்பித்தவர்கள், இரண்டாவது பாராளுமன்றத் தேர்தல் பிரச்சாரத்தில் (1952) பிரதான பேசுபொருளாகச் சமஸ்டிக் கோரிக்கையை முன்வைத்தனர். இதற்கு மக்கள் மத்தியில் பெருமளவு ஆதரவு இருக்கவில்லை. தமிழரசுக் கட்சி நிறுத்திய ஏழு வேட்பாளர்களில் இருவர் மாத்திரம் தெரிவாகினர். எஸ்.ஜே.வி. செல்வநாயகம் காங்கேசன்துறைத் தொகுதியில் ஐ.தே.க. வேட்பாளரிடம் தோல்வியடைந்தார்.

## சமஸ்டிக்கு ஆதரவு

மூன்றாவது பொதுத் தேர்தல் நடைபெற்ற காலத்தில் (1956) சிங்களம் மட்டும் என்ற கோசம் தென்னிலங்கையில் பிரதான இடத்தைப் பிடித்திருந்தது. நித்தம்புவவில் 17 – 12 – 1955ந் திகதி நடைபெற்ற வருடாந்த மாநாட்டில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியும், 18 – 02 – 1956ல் களனியில் நடைபெற்ற வருடாந்த மாநாட்டில் ஐக்கிய தேசியக் கட்சியும், 'சிங்களம் மட்டும்' என்ற தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தன. சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தீர்மானம் தமிழின் நியாயபூர்வ உபயோகத்தை அங்கீகரிப்பதற்கான ஏற்பாட்டுடன், ஒரே அரசகரும மொழியாக சிங்களம் என்றும் (Sinhala the only official Language with provision for the recognition of reasonable use of Tamil), ஐக்கிய தேசியக் கட்சியின் தீர்மானம் இலங்கையின் அரச மொழியாக சிங்களம் மாத்திரம் இருத்தல் வேண்டும் (Sinhala should be made the state Language of Ceylon) என்றும், அமைந்திருந்ததை இங்கு குறிப்பிடலாம்.

இந்தப் பின்னணியில் தமிழரசுக் கட்சியின் சமஸ்டிக் கொள்கை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெருமளவு மக்களைக் கவர்ந்தது. சமஸ்டி அமைப்பில் தமிழ் மக்களுக்கு மாத்திரமின்றி முஸ்லிம்களுக்கும் தனியான அலகொன்றைக் கோருவோம் என்று தமிழரசுக் கட்சி வாக்குறுதி அளித்ததால், முஸ்லிம்களும் அக்கட்சியை ஆதரித்தனர். தமிழரசுக் கட்சி தேர்தலில் பத்து ஆசனங்களைப் பெற்றது.

சிவா சுப்பிரமணியம்

கிட்டத்தட்ட இருபத்தைந்து வருட காலம் தொடர்ச்சியாக சமஸ்டியை வலியுறுத்தி வந்த தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணியாக உருமாற்றம் பெற்று, 1976 மே 14ந் திகதி வட்டுக்கோட்டை மாநாட்டில் தனிநாட்டுத் தீர்மானத்தை நிறைவேற்றியது. கொள்கை நிலைப்பட்ட முடிவாக இதைக் கருத முடியாது. எதிர்காலத்தில் தமிழ் மக்களை மோசமான அவல நிலைக்கு இட்டுச் செல்லும் முடிவாக இது இருந்தது.

தமிழரசுக் கட்சியின் செயற்குழுக் கூட்டம் 1961 டிசம்பர் 26ந் திகதி நடைபெற்றபோது, வவுனியாவைச் சேர்ந்த ஏ.சிற்றம்பலம் தனிநாட்டுப் பிரேரணையை முன்மொழிந்தார். தமிழரசுக் கட்சி அதை நிராகரித்தது. தனிநாட்டுப் பிரேரணை ஆயுதப்போருக்கு

www.padippakam.com

இட்டுச் செல்லும் என்றும், ஆயுதப்போர் புதிய பிரச்சினைகளை உண்டாக்குமேயொழிய, எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காணாது என்றும், தமிழரசுக் கட்சித் தலைமை கூறியது.

எந்தப் பிரச்சினைக்கும் தீர்வுகாண முடியாத தனிநாட்டுப் பிரேரணையை வட்டுக்கோட்டையில் ஏன் நிறைவேற்றினார்கள் என்பது முக்கியமான கேள்வி. கொள்கைக்கு அப்பாற்பட்ட சமரச ஏற்பாடாகவே தனிநாட்டுப் பிரேரணை நிறைவேற்றப்பட்டது. தமிழரசுக் கட்சியும், தமிழ் காங்கிரஸ் கட்சியுமே, தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரதான கட்சிகள். சமஸ்டியைத் தீவிரமாக வலியுறுத்திய தமிழரசுக் கட்சியும், சமஸ்டியைத் தீவிரமாக எதிர்த்த தமிழ் காங்கிரஸ் கட்சியும், கூட்டுச் சேர்வதற்குச் சமஸ்டி அல்லாத வேறொரு கொள்கை தேவைப்பட்டதாலேயே இந்த முடிவுக்கு வந்தார்கள்.

கூட்டணித் தலைவர்களின் பிந்தியகால செயற்பாடுகளிலிருந்து தனிநாட்டுத் தீர்மானத்தில் அவர்கள் விசுவாசமான பற்றுறுதி கொண்டிருக்கவில்லை என்பதை விளங்கிக் கொள்ளலாம். தனிநாட்டுத் தீர்மானத்தை நிறைவேற்றிய பின், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் செய்த முதலாவது பிரதான காரியம், ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தால் முன்மொழியப்பட்டதும், அதிகாரங்கள் இல்லாததுமான மாவட்ட அபிவிருத்திச் சபையை ஏற்று அதற்கான தேர்தலில் போட்டியிட்டதே. இன உணர்வைத் தட்டியெழுப்பும் பிரசாரத்தில் வல்லவர்களான கூட்டணித் தலைவர்கள், தனிநாட்டுத் தீர்மானத்தையும் அவ்வாறு கச்சிதமாகப் பயன்படுத்தித் தங்கள் பாராளுமன்ற ஆசனங்களைத் தக்க வைத்துக் கொண்டனர். ஆனால், அத்தீர்மானத்தின் விளைவாக, மக்கள் இழக்கக்கூடாததையெல்லாம் இழந்து ஏதிலிகளாக நிற்கின்றனர்.

## பின்னடைவு

தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு என வெவ்வேறு பெயர்களில் செயற்பட்ட போதிலும், ஆறு தசாப்தங்களுக்கு மேலாக ஒரே தலைமைப் பாரம்பரியமே தொடர்கின்றது. இக்காலப்பகுதியில், இத்தலைமை அதன் பகிரங்க அரசியல் செயற்பாட்டில் இனப்பிரச்சினையைத் தவிர வேறு எந்தப் பிரச்சினையையும் உள்ளடக்கவில்லை. அரசியலில் அறுபது வருடங்கள் சாதாரண காலப்பகுதி அல்ல. இனப் பிரச்சினை தொடர்பாக கருத்து ஈடுபாட்டுடனும், தீர்க்கதரிசனத்துடனும் செயற்பட்டிருந்தால், இக்காலப்பகுதியில் சிறிதளவாவது முன்னேற்றத்தை அடைய முடிந்திருக்கும். ஆனால் தமிழ் மக்கள் பின்னடைவுகளையே தொடர்ச்சியாக சந்தித்திருக்கிறார்கள். இழப்புகளும், அழிவுகளுமே அவர்கள் கண்ட பலன். இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வில் அக்கறை உள்ள ஒவ்வொருவரும் இதற்கான காரணம் என்னவென்று நிதானமாகச் சிந்திக்க வேண்டிய காலம் வந்துவிட்டது.

சமகால யதார்த்தத்தை விளங்கிச் செயற்படுவதும், கிடைக்கும் சந்தர்ப்பங்களைச் சாதகமாகப் பயன்படுத்துவதும், நட்புச் சக்திகளைச் சரியாக இனங்காண்பதும், அரசியல் செயற்பாடுகளைச் சரியாக முன்னெடுப்பதற்கு அத்தியாவசியமானவை. தமிழ் மக்களின் அரசியல் தலைமையைத் தொடர்ச்சியாகத் தங்களிடம் வைத்திருப்பதில் தமிழ்த் தலைவர்கள் அக்கறை செலுத்தினார்களேயொழிய, மேலே கூறிய விடயங்களில் கவனம் செலுத்தவில்லை. சிங்கள மக்கள் மத்தியிலும் ஆதரவுத் தளமொன்றை உருவாக்குவதன் மூலமே இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு நிரந்தரமானதாக நிலைக்க முடியும். தமிழ்த் தலைவர்கள் இதைப் புரிந்துகொண்டு செயற்படவில்லை. சிங்கள விரோத உணர்வைத் தமிழ் மக்களிடம் தோற்றுவிக்கும் வகையிலேயே இவர்களின் அரசியல் செயற்பாடுகள் அமைந்திருந்தன. தமிழ் மக்களின் போராட்டம் சிங்கள மக்களுக்கு எதிரானது என்ற உணர்வு அம்மக்களிடம் தோன்றுவதற்கு இது இடமளித்தது.

கிடைத்த சந்தர்ப்பங்களைச் சாதகமான முறையில் பயன்படுத்தியிருந்தால், இன்று தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் அவலநிலையைத் தவிர்க்க முடிந்திருக்கும். பண்டா — செல்வா ஒப்பந்தம், வடக்கு — கிழக்கு மாகாணசபை, சந்திரிகாவின் அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டம் என்பன விசேடமாகக் குறிப்பிட வேண்டியவை. இவை தொடர்பாகத் தமிழ்த் தலைமை நடந்துகொண்ட முறை, ஐக்கிய தேசியக் கட்சிக்கு நேரடியாக நன்மை பயப்பதாக இருந்ததையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

பண்டா — செல்வா ஒப்பந்தம் சமஸ்டி ஆட்சியமைப்புக்கான அடிப்படையை உருவாக்குகின்றது என்று எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அப்போது கூறினார். ஆனால் ஒப்பந்தத்துக்கு அச்சுறுத்தல் ஏற்பட்ட நேரத்தில் அதைப் பலவீனப்படுத்தும் வகையிலேயே அவரது கட்சி செயற்பட்டது. தென்னிலங்கையில் ஐக்கிய தேசியக் கட்சி ஒப்பந்தத்துக்கு எதிராக மோசமான இனவாதப் பிரச்சாரத்தை மேற்கொண்டது. ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தால் நாடு பிளவுபட்டுவிடும் என்றும், வடக்கு – கிழக்கு மாகாணங்களில் வாழும் சிங்களவர்கள் தமிழ் படிக்க நேரும் என்றும், அம்மாகாணங்களில் சிங்களவர்களைக் குடியேற்ற முடியாது போய்விடும் என்றும், சிங்கள மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்ததோடு, பௌத்த குருமாரையும் இப்பிரச்சாரத்தில் இணைத்துக் கொண்டது.

ஒப்பந்தத்துக்கு எதிராக ஜே.ஆர்.ஜெவர்த்தனவின் தலைமையில் கண்டி யாத்திரையும் சென்றார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரச்சாரத்துக்கும், அரசாங்கத்திலிருந்த வலதுசாரி அமைச்சர்களின் எதிர்ப்புக்கும் மத்தியில், பிரதமர் பண்டாரநாயக்க ஒப்பந்தத்தை ஆதரித்து உறுதியாக நின்றார். இந்த நிலையில், பிரதமரைப் பலவீனப்படுத்த வேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காக வலதுசாரி அமைச்சர்கள் குழு மேற்கொண்ட தீர்மானத்தின் அடிப்படையில் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு மீண்டும் சிங்கள சிறீ இலக்கத் தகடு பஸ்கள் அனுப்பப்பட்டன. வலதுசாரி அமைச்சர்களின் நோக்கத்தை விளங்கிக்கொண்டு பிரதமரின் கரங்களைப் பலப்படுத்தி ஒப்பத்தை நடைமுறைக்குக் கொண்டுவரும்


படிப்பகம்

www.padippakam.com

வகையில் தமிழரசுக் கட்சி செயற்பட்டிருக்க வேண்டும். ஆனால் தமிழரசுக் கட்சி சிங்கள சிறீ எதிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்துப் பிரதமரைப் பலவீனப்படுத்தியது. அரசியல்வாதி என்ற வகையில் ஒப்பந்தத்தை ரத்துச் செய்வதைத் தவிர வேறு வழி பிரதமருக்கு இருக்கவில்லை. ஒப்பந்தம் நடைமுறைக்கு வருவதை எப்படியாவது தடுக்க வேண்டும் என்ற ஐக்கிய தேசியக் கட்சியின் எண்ணம் ஈடேறுவதற்குத் தமிழரசுக் கட்சியும் கைகொடுத்தது.

வடக்கு கிழக்கு மாகாணசபை செயற்பட முடியாத நிலையைப் புலிகளும் பிரேமதாசவும் இணைந்து உருவாக்கியபோது, தமிழர் விடுதலைக் கூட்டணி அதற்கு எதிராக எந்த நகர்வும் மேற்கொள்ளாததின் மூலம் ஐக்கிய தேசியக் கட்சியின் முடிவுக்கு மௌன ஆதரவு அளித்தது.




சந்திரிகாவின் அரசாங்கம் முன்வைத்த அதிகாரப் பகிர்வுத் தீர்வுத்திட்டம் பல சிறப்பான அம்சங்களைக் கொண்டிருந்தது. அது சமஸ்டி ஆட்சியமைப்புக்கு மிக அண்மையான திட்டம். அத்தீர்வுத்திட்டத்தின் பிராந்திய சபைகளுக்கான அதிகாரங்களையோ, விடயங்களையோ, எல்லைகளையோ, சம்பந்தப்பட்ட சபையின் அல்லது சபைகளின் சம்மதமின்றி எவ்விதத்திலும் மாற்ற முடியாது. இது ஒரு சிறப்பான பாதுகாப்பு ஏற்பாடு. இந்தத் தீர்வுத்திட்டம் உரிய முறையில் பாராளுமன்றத்தில் நிறைவேறவிடாது தடுப்பது ஐக்கிய தேசியக் கட்சியின் அன்றைய பிரதான நிகழ்ச்சி நிரலாக இருந்தது. தீர்வுத் திட்டத்தை எதிர்த்ததன் மூலம் தமிழ்த் தலைவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் நோக்கம் நிறைவேறுவதற்குக் கைகொடுக்கும் வகையில் செயற்பட்டார்கள்.

அன்று அத்தீர்வுத்திட்டத்தை ஒட்டுமொத்தமாக நிராகரித்துவிட்டு, சந்திரிகா அரசாங்க காலத்தில் தீர்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைகள் இனப்பிரச்சினைக்கான தீர்வில் எடுகோளாக இருக்கலாம் என்று இப்போது கூட்டமைப்பினர் கூறுவது வேடிக்கையாக இருக்கிறது.

## இடதுசாரி எதிர்ப்பு

தேசிய இனப் பிரச்சினை சிங்களம் மட்டும் சட்டத்துடன் புதிய பரிமாணத்தைப் பெற்றது. தமிழ் அரசியல் அரங்கில் இப்பிரச்சினை பிரதான இடத்தைப் பெறத் தொடங்கியதும் இதன் பின்னரே. இக்காலத்தில் இடதுசாரிக் கட்சிகள் சிங்களம் மட்டும் சட்டத்துக்கு எதிரான நிலைப்பாட்டில் மிகவும் உறுதியாக நின்றன. சிங்களம் மட்டும் சட்டத்தை அவை பாராளுமன்றத்தில் எதிர்த்தது மாத்திரமின்றி, தென்னிலங்கையில் சிங்கள மக்கள் மத்தியில் அதற்கு எதிரான பிரச்சாரத்தில் ஈடுபட்டன. இடதுசாரிக் கட்சிகளை நட்புச் சக்தியாகக் கருதி அவற்றுடன் உறவை வளர்த்துக் கூட்டாகச் செயற்படுவதற்கு அன்றைய தமிழ்த் தலைமை முன்வந்திருந்தால், இனப் பிரச்சினையின் தீர்வுக்குப் பலம்மிக்க ஆதரவுத் தளமொன்றைச் சிங்கள மக்கள் மத்தியில் உருவாக்க முடிந்திருக்கும். தமிழ்த் தலைவர்கள் அப்போது இடதுசாரி எதிர்ப்பிலேயே கூடுதலாகக் கவனம் செலுத்தினார்கள். தென்னிலங்கையில் இடதுசாரிகளை எதிர்க்கும் சக்திகளையே நட்புச் சக்திகளாகக் கருதினார்கள். இதற்கு இரண்டு காரணங்களைக் கூறலாம். அன்றைய தமிழ்த் தலைமையின் பிதாமகரான எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அடிப்படையிலேயே மார்க்சிய விரோதி என்பது ஒரு காரணம். அவர் மார்க்சிஸ்ட்டுகளிலிருந்து தூர விலகி நிற்கும் மனோபாவம் உடையவர். இடதுசாரிகள் தங்கள் தலைமைக்கு அச்சுறுத்தலாக வளர்ந்துவிடுவார்கள் என்ற அச்சம் அன்றைய தமிழ்த் தலைமைக்கு இருந்தது இரண்டாவது காரணம்.

இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்னரே யாழ்ப்பாண வாலிபர் சங்கத்தின் செயற்பாடுகளுக்கூடாக யாழ்ப்பாண மாவட்டத்தில் இடதுசாரி சிந்தனை ஓரளவு வேரூன்றியிருந்தது. யாழ்ப்பாண வாலிபர் சங்கம், இடதுசாரிகளின் 'சூரியமல்' இயக்கம் மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கை ஆகியவற்றுடன் உடன்பாடு கொண்டு செயற்பட்டதோடு, அதன் முக்கியஸ்தர்களாக விளங்கிய ஹண்டி பேரின்பநாயகம், பி.நாகலிங்கம், கே.தர்மகுலசிங்கம், ரி.துரைசிங்கம், வி.சிற்றம்பலம், வி.சச்சிதானந்தம் போன்றோர் பிற்காலத்தில் இடதுசாரிக் கட்சிகளுடன் தங்களை இணைத்துக் கொண்டனர்.

## புதிய பாதை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் பாதை இன்று முட்டுச்சந்துக்கு வந்திருக்கிறது. தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பெருமளவு பிரதிபலிக்கும் அதிகாரப் பகிர்வுத் திட்டத்தை நிராகரித்துப் புலிகளின் தனிநாட்டு நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற்பட்டார்கள். இச் செயற்பாடு இவர்களின் பாராளுமன்றப் பதவிகளைக் காப்பாற்றுவதற்கு உதவியது. மக்களுக்கு அழிவுகளும் இழப்புகளுமே கிடைத்தன. வரலாற்றில் முன்னர் ஒருபோதும் இடம்பெற்றிருக்காத அவலங்களைத் தமிழ் மக்களுக்கு இவர்கள் ஏற்படுத்தினர்.

ஆயுதப் போராட்டமோ, தனிநாடோ சாத்தியமில்லை என்பது தெளிவாகிவிட்டது. இந்த நிலையில், சென்ற பாதை தவறானது என்பதைப் பகிரங்கமாக ஏற்றுக்கொண்டு புதிய சூழ்நிலைக்கு உகந்த வேலைத்திட்டமொன்றைத் தயாரித்துச் செயற்படுவதற்குத் தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் தயாராக இருப்பதாகத் தெரியவில்லை. தாங்களாக எதுவும் செய்ய முற்படாமல் சர்வதேச சமூகம் கைகொடுக்கும் என்ற நம்பிக்கையுடன் இருக்கிறார்கள்.

இன்றைய நிலையில் நியாயமான அரசியல் தீர்வு அரசியலமைப்புத் திருத்தத்திற்கூடாகவே நடைமுறைக்கு வர வேண்டும். சர்வஜன வாக்கெடுப்பின் பின்னரே அரசியலமைப்புத் திருத்தம் பூர்த்தியடையுமென்பதால், சிங்கள மக்களில் கணிசமானோரின் ஆதரவு அவசியமாகின்றது. தமிழ் பேசும்

**தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்க..**


படிப்பகம்

www.padippakam.com

# 40 நாட்கள் சமத்துவம் பேணும் ஐயப்ப பக்தர்கள்!

இன்றைக்கு கேரளத்திலும், தமிழகத்திலும் ஐயப்பன் வழிபாடு பிரபலமடைந்துள்ளது. தமிழகத்தைவிடக் கேரளத்தில் மிக விரிவான அளவில் வளர்ந்திருக்கிறது. உழைக்கும் மக்களில் பெரும் பகுதியினர் – இவர்களில் பெரும்பாலோர் தாழ்ந்த சாதியைச் சார்ந்தவர்கள் – ஒவ்வொரு மார்கழி மாதத்திலும் 40 நாட்கள் விரதமிருந்து, கால்நடையாகப் பத்து நாட்கள் நடந்து சபரிமலை சென்று ஐயப்பனை வழிபடுகிறார்கள். இது ஒரு பக்தி இயக்கமாக உருவாகிவிட்டது. இந்த வழிபாட்டு இயக்கம் நாளுக்குநாள் அதிகமாகிக் கொண்டு வருகிறது. கேரளத்தைச் சேர்ந்த எனது நண்பர் இதைப்பற்றி வியப்புத் தெரிவித்து நாஸ்திகத்தைக் கொள்கையாகக் கொண்ட நமது இயக்கத்தைச் சார்ந்த தோழர்களும் இதில் வருடம் தவறாமல் கலந்து கொள்கிறார்களே – இயக்கப் போராட்டங்களில் முன்னணியில் நிற்கும் அத்தோழர்கள் இத்தகைய மூடநம்பிக்கையால் இயக்கப்படுவதன் காரணம் என்ன என்று என்னிடம் வினவினார். அத்தோழர்களில் பெரும்பாலோர் தாழ்ந்த சாதியைச் சார்ந்தவர்கள்தானே என்று நான் கேட்டேன். நண்பர் 'ஆம்' என்றார்.

வாழ்க்கையில் இவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள். புலையர் – தீயர் சமூகத்தைச் சேர்ந்த ஒருவர், அவர் எவ்வளவு முதியவரானாலும், அவரை நம்பூதிரி வீட்டுக் குழந்தை 'எடே' என்றுதான் அழைக்கும். தீயருக்கு அளிக்கப்பட்ட உணவு மிஞ்சிவிட்டால் அதை நம்பூதிரி 'சேசம்' தீட்டுப்பட்டது என்று சொல்லி விலக்கிவிடுவார். அவர்கள், மேல்சாதியினர் தெருவில் நுழையலாகாது. தீட்டு ஒவ்வொரு சாதிக்கும் ஒவ்வொரு அளவுதூரம் சென்று தாக்கும். இது எதார்த்த வாழ்க்கை. ஆனால் சபரிமலைக்குச் செல்வதாகக் கூறி மாலைபோட்டுக் கொண்டவுடன் தீயர் 'ஐயப்பசாமி' ஆகிவிடுவார். பிற ஐயப்பர்கள் அவர்கள் நம்பூதிரிகளாக இருந்தாலும், அவரை 'சாமீ' என்றே அழைக்க வேண்டும். அதிலும் சபரிமலைக்குச் செல்லும் அந்தப் பத்து நாட்களிலும் அவர்கள் ஒன்றாகவே உண்ண வேண்டும். அங்கே தீயரென்றும், நம்பூதிரியென்றும், நாயரென்றும் வித்தியாசம் கிடையாது. பழைய இனக்குழு சமத்துவ நிலைக்கே அவர்கள் திரும்பிச் சென்று விடுகிறார்கள் என்றே கூறவேண்டும். சபரிமலை யாத்திரை முடிந்து ஊர் திரும்பியதும் பழைய யதார்த்த வாழ்க்கை தொடர்கிறது. மீண்டும் நம்பூதிரி வீட்டுக் குழந்தை தீயரை 'எடே, எடே' என்றுதான் அழைக்கிறது. இதுவரைத் தான் அனுபவித்த கற்பனையான சமத்துவத்தை எண்ணித் தீயர் ஏங்குகிறார். அடுத்த மார்கழியை எதிர்பார்க்கத் தொடங்குகிறார்.

மதம் கொடுக்கும் இந்த தற்காலிகமான சமத்துவம் சில நாட்களுக்கே நிலைத்திருப்பினும் தீயர் அதைப் பெரியதென நினைக்கிறார். ஆண்டவருடைய பக்தராகச் சென்ற நிலையில்தான் இச்சமத்துவம் ஏற்பட முடியும் என அவர் நினைக்கிறார். இத்தகைய நிலையையே மார்க்ஸ், **'மதம் என்பது இதயமற்ற உலகில் இதயமாய்க் காட்சியளிக்கிறது...அது மக்களுக்கு அபினி போன்றது'** என்று குறிப்பிடுகிறார். அதாவது அபினி உண்மை நிலையை மறக்கவும், போலிச் சுதந்திர உணர்வை ஏற்படுத்தவும் உதவுகிறது.

**(பேராசிரியர் நா.வானமாமலை அவர்கள் எழுதிய 'இந்தியத் தத்துவ மரபும் மார்க்சிய இயக்கவியலும்' என்ற நூலின் ஒரு பகுதியே எமது வாசகர்களுக்காக மேலே தரப்பட்டுள்ளது)** *

**6ம் பக்கத்தொடர்ச்சி...**

மக்களும், சிங்கள மக்களும் இணைந்து தீர்வுக்கான கோரிக்கையை ஒரே குரலில் முன்வைக்கும் நிலையிலேயே இது சாத்தியமாகும். இந்த இலக்கை நோக்கிய அணுகுமுறைதான் இன்றைய தேவை.

இவ்விடத்தில் தென்னிலங்கையின் இடதுசாரிகளும் முற்போக்காளர்களுமே உண்மையான நட்பு சக்தியாகச் செயற்படக்கூடியவர்கள்.

இனப்பிரச்சினை பற்றி முற்போக்கான சிந்தனையுடன் பல ஆய்வறிவாளர்கள் மற்றும் ஆர்வலர்கள் வெவ்வேறு தளங்களில் செயற்படுகின்றனர். இவர்களையெல்லாம் அணிதிரட்டி அரசியல் தீர்வுக்கான போராட்டத்தைத் தமிழ் மக்களின் போராட்டம் என்ற வட்டத்துக்கு வெளியே எடுத்துச் சென்று தமிழ், சிங்கள மக்களின் கூட்டுப் போராட்டமாக்கும் பட்சத்தில் நிரந்தரத் தீர்வு சாத்தியமாகும்.

(தோழர் சிவா சுப்பிரமணியம் 'தினகரன்' நாளேட்டின் முன்னாள் பிரதம ஆசிரியராவார். அவரது இந்தக் கட்டுரை இலங்கையில் உள்நாட்டு யுத்தம் 2009இல் முடிவுற்ற சில நாட்களின் பின்னர் இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றத்தினால் சிறு பிரசுர வடிவில் வெளியிடப்பட்டதாகும். அதன் சாராம்சம் இன்றைக்கும் பொருத்தமாக இருப்பதால், அதன் முக்கியமான பகுதிகளை எமது வாசகர்களுக்காக வெளியிட்டுள்ளோம் – வானவில்) *


படிப்பகம்

www.padippakam.com

# தாய்லாந்து மக்கள் பார்வையில் தமிழர்கள்!

தாய்லாந்தில் 'தமிழ்' என்ற சொல்லுக்குத் 'தாய்' மக்கள் புதுப் பொருள் கொடுத்திருக்கின்றனர். 'தமிழ்' என்னும் சொல்லை அவர்கள் 'தமின்' என 'ன'கர ஒலி கொடுத்து ஒலிக்கின்றனர். 'தமின்' எனப்படுவது அவர்கள் மொழியில் 'கொடியவன்' என்ற பொருளைப் பெற்றிருக்கின்றது. பேங்கோக்கை விட்டுச் செல்லுமுன், வானூர்த்தி நிலையத்திலுள்ள ஊழியர் ஒருவரிடம் 'தமின்' என்ற சொல்லின் பொருளைக் கேட்டேன். அதற்கவர், 'தமின் என்றால் கொடிய கறுத்த இந்தியன்' என்று விடையிறுத்தார். சோழர் ஈழநாட்டின் மீது படையெடுத்த காலத்தில் புத்த முனிவர்கள் பலர் ஈழத்திலிருந்து தாய்லாந்திற்குக் கப்பலேறிச் சென்றனர். அவர்கள் அங்கு சென்றிருந்தபோது தமிழ் மக்கள் தங்கள்பால் இழைத்த கொடுமைகளைப் பற்றிப் பேசினர். இது காரணம் பற்றியே தாய்லாந்தில் அதுகாறும் சிறப்புப் பெற்று விளங்கய 'தமிழ்' என்னும் சொல்லிற்குக் கொடுமையுடன் தொடர்புள்ள புதிய பொருளொன்று சேர்ந்தது.

**- 'வணபிதா தனிநயகம் அடிகளின் படைப்புகள்' என்ற நூலில்**

# டெமென்சியா என்றால் என்ன?

"எல்லோருக்கும் ஞாபக மறதி ஏற்படும். அது டெமென்சியா கிடையாது. ஆனால் வார்த்தைகளை மறந்து விடுவதும், பேச்சு சரியாக வராததும், மற்றவர்கள் பேசும்போது புரிந்து கொள்ள முடியாமல் தடுமாறுவதும், முன்பு செய்தித்தாள் படித்துக் கொண்டிருந்தவர்கள் படிக்க முடியாமல் போவதும், உறவினர்களை

# நறுக்கு நொறுக்கு NUTS

அடையாளம் கண்டுகொள்ள முடியாமல் போவதும், சமையல் அறைக்குள் செல்வதாக நினைத்துக்கொண்டு பாத்ரூமுக்குள் நுழைவதும், பல வருடங்களாக ஒரே இடத்தில் வசித்தும் கூட வெளியில் சென்று வீடு திரும்பும்போது வழி தெரியாமல் தவிப்பதும், ஒரு வயதானவருக்கு ஏற்பட்டால் அது கவனிக்கப்பட வேண்டிய நிலையாகும். இது டெமென்சியாவின் ஆரம்ப அறிகுறிகளாக இருக்கலாம்.

கேட்ட கேள்வியையே அடிக்கடி கேட்பார்கள். உணவு சாப்பிட்ட பிறகும் கூட உடனே வந்து மறுபடியும் சாப்பாடு போடச் சொல்வார்கள். இரவு பகல் தெரியாமை, நேரத்தை உணரமுடியாத நிலை போன்ற அறிகுறிகள் அடிக்கடி தென்பட்டால் அவர்களுக்கு மருத்துவ ஆலோசனை அவசியம் தேவை.

**- மனநல மருத்துவர் ஸ்ரீதர் வைத்தீஸ்வரன் 'கல்கி' இதழுக்கு வழங்கிய ஒரு பேட்டியிலிருந்து**

# ஆட்கொல்லி எபோலா!

எபோலா (Ebola) என்ற ஆட்கொல்லி நோய் ஆரம்பமாகி இந்த வருடம் மார்ச் மாதத்துடன் ஒரு வருடம் பூர்த்தி ஆகின்றது. இது முதலில் ஆபிரிக்காவிலுள்ள கினியா நாட்டில் ஆரம்பமாகியது (தொகை 3,429). பின்னர் அதன் எல்லையிலுள்ள சியாரலியோனுக்கும் (தொகை 11,841), லைபீரியாவுக்கும் (தொகை 9,602) பரவியது. இந்த ஒரு வருட காலத்தில் மொத்தமுள்ள 24,907 நோயாளிகளில் 10,326 பேர் இறந்துவிட்டனர்.

இந்த நோயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக 2.9 பில்லியன் அமெரிக்க டாலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. இதைக் கட்டுப்படுத்துவதற்கென 10 வரையான மாத்திரை வகைகள் பரிசோதிக்கப்பட்டுள்ளன. 5 வகையான தடுப்பூசி மருந்துகளும் சோதிக்கப்பட்டுள்ளன.

இந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகள் மந்தகதியிலேயே நடைபெறுவதாக மனித உரிமை அமைப்புகள் குற்றம்சாட்டியுள்ளன.

**தகவல்: TIME magazine**

# இந்தியப்பிரதமர் சீன சமூக வலைத்தளத்தில் கணக்கு தொடங்கினார்

சீன சமூக வலைத்தளமான சீனா வெய்போவில் (sina weibo) இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கணக்கு தொடங்கியிருக்கிறார்.

இந்தியாவின் பிரதமரான பிறகு முதன் முறையாக சீனா சென்றார் மோடி. மே 14 முதல் 16 வரை அவர் அங்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டார்.

இந்நிலையில், சீன மக்களுடன் நட்புறவை வளர்த்துக் கொள்ளும் வகையில், அந்நாட்டு சமூக வலைத்தளத்தில் அவர் கணக்கு தொடங்கியிருக்கிறார்.

சீனா வெய்போ சமூக வலைத்தளத்தில் கணக்கு தொடங்கியிருக்கும் முதல் இந்தியத் தலைவர் மோடி என்பது குறிப்பிடத்தக்கது.

அந்த வலைத்தளத்தில் அவர் பதிந்துள்ள முதல் நிலைத்தகவலில், "ஹலோ சீனா. சீன நண்பர்களுடன் உரையாட எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்" என குறிப்பிட்டுள்ளார்.

சீனா வெய்போவில் அவர் கணக்குத் தொடங்கி ஒரு மணி நேரத்தில் 7000 பார்வைகள் கிடைத்துள்ளது.


படிப்பகம்

# அதிகரிக்கும் குளிரூட்டிகளின் பயன்பாட்டால் சூடாகும் பூமி

வீடுகள் மற்றும் அலுவலகங்களில் குளிரூட்டிகளை அதிகம் பயன்படுத்துவதால் புவிவெப்பம் பன்மடங்கு அதிகரித்து வருகிறது என்று விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

இதுதொடர்பாக அமெரிக்காவின் கலிபோர்னியா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் ஆய்வு செய்து அண்மையில் ஆய்வறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

அதில் கூறியிருப்பதாவது:

உலகம் முழுவதும் பணக்காரர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதனால் குளிரூட்டிகளின் பயன்பாடும் கணிசமாக உயர்ந்து வருகிறது.

அமெரிக்காவில் 90 சதவீத வீடுகளில் குளிரூட்டிகள் உள்ளது. இதே போல மக்கள்தொகை அதிகம் கொண்ட சீனா, இந்தியா போன்ற நாடுகளிலும் பங்களாதேஸ், பிரேசில், இந்தோனேசியா, மெக்சிகோ, நைஜீரியா, பாகிஸ்தான், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், வியட்நாம் போன்ற நாடுகளிலும் குளிரூட்டிகளின் பயன்பாடு கடந்த சில ஆண்டுகளாக அதிகரித்து வருகிறது.

வீடு, அலுவலகத்தை குளுமையாக வைத்திருக்க வேண்டும் என்பதற்காக குளிரூட்டிக்களை அதிகம் பயன்படுத்துகிறோம். அதேநேரம் அந்த குளிரூட்டிகளிலிருந்து வெளியாகும் ஹைட்ரோ புளூரோகார்பன் வாயுவால் (hydrofluorocarbon gas) நமது உலகம் சூடாகிக் கொண்டிருக்கிறது.

இதேநிலை நீடித்தால் புவிவெப்பம் கட்டுக் கடங்காமல் போய்விடும். இவ்வாறு அந்த ஆய்வறிக்கையில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

**அறிக்கையின் இணைப்பு:**

http://www.afp.com/en/news/air-conditioning-use-poised-spike-worldwide)

# சீனாவில் திரைப்படங்களின் பிரவாகம்!

சீனாவில் தினசரி 15 புதிய திரைப்படங்கள் திரைக்கு வருகின்றன. 2014இல் இத்திரைப்படங்களால் 4.7 பில்லியன் டொலர்கள் வருமானம் கிடைத்துள்ளது. இதில் 2.6 பில்லியன் டொலர்கள் சீனாவில் தயாரிக்கப்பட்ட திரைப்படங்களால் கிடைத்தவையாகும். இந்தத் தசாப்த முடிவில் இத்தொகை 10 பில்லியன் டொலர்களைத் தாண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# உக்ரேனில் உக்கிரம் பெறும் அழிவுகள்!

உக்ரேன் நாட்டில் 2014 ஏப்ரலில் அரச படைகளுக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் ஆரம்பித்த சண்டையால் இதுவரை 6,000இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். இந்த வருடம் பெப்ருவரி 15இல் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்ட அந்த மாதத்தின் 15 நாட்களில் மட்டும் 842 பேர் கொல்லப்பட்டுள்ளதாக ஐ.நாவின் தகவலறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

# தங்கமோ தங்கம்!

உலகின் சக்திவாய்ந்த நாடுகள் தமது அந்நியச் செலாவணிக் கையிருப்பாகத் தங்கத்தையே சேமித்து வைத்திருப்பது வழமை. இதில் அமெரிக்காவே இதுவரை காலமும் முன்னணியில் இருந்து வந்தது. ஆனால் இப்பொழுது சீனா அமெரிக்காவை முந்திக் கொண்டுள்ளது.

சீனாவின் தற்போதைய தங்கக் கையிருப்பு 10,000 தொன்களாக உயர்ந்துள்ளது. தொடர்ந்தும் சீனா பல்வேறு நாடுகளிடமிருந்து தங்கத்தை வாங்கிச் சேமித்து வருகிறது. அமெரிக்காவின் தங்கக் கையிருப்பு 8,133 ஆக மட்டுமே உள்ளது. அத்துடன் சீனாவிடம் அந்நியச் செலாவணிக் கையிருப்பாக 4.4 றில்லியன் (Trillion) அமெரிக்க டொலர்களும் உள்ளது.

இந்தியாவில் 18,000 ஆயிரம் மெற்றிக் தொன் தங்கம் தனிப்பட்டவர்களிடம் நகைகளாகவும், வேறு வடிவங்களிலும் உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதைவிட, இந்தியாவின் இந்துக் கோவில்களில் மக்களால் தானமாக அளிக்கப்பட்ட 2,250 தொன் தங்கம் உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

இந்தத் தங்கத்தை முதலீடாகப் பயன்படுத்துவதற்காக மோடி அரசாங்கம், தங்கத்தை வங்கிகளில் வைப்புச் செய்பவர்களுக்கு உயர்ந்த வட்டி வீதம் வழங்கப்படும் எனக் கவர்ச்சி அறிவிப்பு விடுத்துள்ளது.

# உலகத்தைக் காக்க உறுதியான நடவடிக்கை வேண்டும்!

தொழில்நுட்பம், வாழ்க்கைமுறை, கொள்கை என்பனவற்றில் "ஆழமான மாற்றங்கள்" என்பன செய்யப்படாமல், 2050இல் சூழல் மாசுபடல், காலநிலை மாற்றம் என்பனவற்றைத் தடுக்கும் இலக்கை அடைய முடியாது என, ஐரோப்பிய யூனியனின் சுற்றுச்சூழல் முகவரகம் அறிவித்துள்ளது. தரமற்ற காற்றினால் வருடந்தோறும் பலநூறு ஆயிரம் மக்கள் இறக்க நேரிடும் எனவும் அது சுட்டிக்காட்டியுள்ளது.

# 'யோகா'வுக்கு வந்த யோகம்!

இந்திய அரசாங்கம் இவ்வாண்டு சமர்ப்பித்துள்ள வரவு செலவுத் திட்டத்தில், 'யோகா' பயிற்சியை ஒரு தொண்டு நடவடிக்கை என வகைப்படுத்தி உள்ளதுடன், அதற்கு வரி விலக்கு அளிக்கவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

# நேபாளத்தின் துயரம்

அண்மையில் நேபாளத்தில் ஏற்பட்ட நில நடுக்கத்தின் சக்தியளவு 7.8 றிச்சர்.
மரணமானோர் தொகை 6,000 பேர் வரை.
காயமடைந்தோர் எண்ணிக்கை 12,000.
ஐ.நாவால் அறிவிக்கப்பட்ட வரலாற்று சிறப்பிடங்கள் உட்படப் பல்லாயிரம் கட்டடங்கள் சேதமடைந்துள்ளன.

www.padippakam.com

# கொழும்பு மேதினக் கூட்டங்கள் உணர்த்தும் பாடம்!




இலங்கையில் இவ்வாண்டும் வழமைபோல பல்வேறு அரசியல் கட்சிகளும் தொழிற்சங்கங்களும் மேதின ஊர்வலங்களையும், கூட்டங்களையும் நடாத்தின. தொழிலாள வர்க்கத்தின் நலன்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் அமைப்புக்கள் தமது பாரம்பரியமான செங்கொடிகளை ஏந்தி மேதினத்தைக் கொண்டாடிய அதேவேளையில், முதலாளித்துவத்தையும், ஏகாதிபத்திய விசுவாசத்தையும், இனவாதத்தையும் தூக்கிப் பிடிக்கும் ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்பனவும் மக்களை ஏமாற்றுவதற்காக பல வர்ணக் கொடிகளைத் தாங்கி வழமைபோல மேதினக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டன.

இந்த வருட மேதினத்தில் ஒரு விசேட அம்சமாக சிறீலங்கா சுதந்திரக் கட்சி இரண்டு பிரிவுகளாக மேதினக் கூட்டங்களை நடாத்தின. ஒரு பிரிவு கட்சியின் உத்தியோகபூர்வமான தலைவரும், ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஊர்வலத்தையும், கொழும்பு ஹைட்பார்க் மைதானத்தில் பொதுக்கூட்டத்தையும் நடாத்தியது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை ஆதரிக்கும் மறுபகுதியினர் இடதுசாரிக் கட்சிகள், மக்கள் ஐக்கிய முன்னணி, தேசிய சுதந்திர முன்னணி என்பனவற்றுடன் இணைந்து கிரிலப்பன அத்துலத்முதலி மைதானத்தில் மேதினப் பொதுக்கூட்டத்தை நடாத்தினர்.

கொழும்பில் நடைபெற்ற மேதினக் கூட்டங்கள் பற்றி மே 4ஆம் திகதி ஆசிரிய தலையங்கம் எழுதிய 'த ஐலன்ட்' பத்திரிகை, ஐ.தே.க மேதினக் கூட்டத்திலேயே ஆகக்கூடிய சனத்தொகை கலந்து கொண்டதாகவும், அதற்கு அடுத்ததாக மகிந்தவுக்கு ஆதரவான சிறீலங்கா சுதந்திரக் கட்சிப் பிரிவு நடாத்திய கூட்டம் இருந்ததாகவும், மூன்றாவதாக ஜே.வி.பியின் கூட்டம் இருந்ததாகவும், நான்காவதாகவே மைத்திரி தரப்பின் கூட்டம் அமைந்திருந்ததாகவும் கூறியுள்ளது.

இந்தத் தலையங்கத்தில் கவனத்துக்கு உரிய இரண்டு முக்கியமான விடயங்கள் உள்ளன. ஒன்று தொழிலாளி வர்க்கத்துக்குச் சார்பான கட்சிகளின் மேதினத்தை விட, முதலாளிகளுக்குச் சார்பான ஐ.தே.கவின் மேதினக் கூட்டத்தில் அதிக மக்கள் கலந்து கொண்டுள்ளனர். இது இலங்கையில்முன்னொருபோதும் இல்லாத எதிர்மாறான ஒரு நிலை. இதற்குக் காரணம், சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பிளவும், மைத்திரியும் சந்திரிகாவும் ஏகாதிபத்திய சதியில் சிக்கி, ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக்கியதும் ஆகும். இந்த இரண்டு நிலைமைகளும் இல்லாதிருந்திருந்தால், சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான முற்போக்கு சக்திகளின் மேதின ஊர்வலமே பிரமாண்டமானதாக இருந்திருக்கும்.

அடுத்த விடயம், சிறீங்கா சுதந்திரக் கட்சியிலும், நாட்டு மக்கள் மத்தியிலும், தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை விட, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கே அதிக ஆதரவு இருக்கிறது என்பதை அவர்கள் இருவருக்கும் சார்பாக இம்முறை நடைபெற்ற மேதினக் கூட்டங்கள் எடுத்துக் காட்டியுள்ளன. அதன் மூலம் என்ன தெரிகிறது என்றால், சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் இரு பிரிவுகளும்ஐக்கியப்படுவதுடன், நடைபெறப்போகும் பொதுத்தேர்தலில் மகிந்தவை பிரதமர் நேட்பாளராக அக்கட்சி நிறுத்தினால் மட்டுமே ஐ.தே.கவைத் தோற்கடிக்க முடியும் என்ற உண்மை நிரூபணமாகியுள்ளது.

இது ஒருபுறமிருக்க, கிரிலப்பனவில் நடைபெற்ற சிறீலங்கா சுதந்திரக் கட்சி மாற்றுக்குழுவின் மேதினக் கூட்டத்துக்கு மகிந்த ராஜபக்ச அனுப்பி வைத்துள்ள மேதின வாழ்த்துச் செய்தியில், இன்றைய அரசாங்கம் மேற்கத்தைய சக்திகளின் கைக்கூலிகளாகச் செயற்படுவதாகவும், இலங்கையின் தொழிலாளி வர்க்கம் ஏகாதிபத்திய சக்திகளை எதிர்த்துப் போராட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் எத்தனையோ தியாகங்கள், இழப்புகள் மத்தியில் புலிப் பயங்கரவாதத்தைத் தோற்கடித்து நாட்டுக்குப் பெற்றுக் கொடுத்த சமாதானத்தை இன்றைய ஆட்சியாளர்கள் உதாசீனப்படுத்துவதாகவும், தமது ஆட்சி ஆரம்பித்து வைத்த அபிவிருத்தித் திட்டங்கள் யாவும் கைவிடப்பட்டு உள்ளதாகவும், உழைக்கும் மக்களின் பொருளாதார நிலை நாளுக்குநாள் மோசமடைவதாகவும், இவற்றைக் கவனிக்காது அரசாங்கம் அரசியல் பழிவாங்கள் நடவடிக்கைகளிலேயே கவனம் செலுத்தி வருவதாகவும், மகிந்த ராஜபக்ச குற்றஞ்சாட்டியுள்ளார். *

---

இன்னும் ஆறு மாதத்தில் ரஷ்ய தொழிலாளர்கள் தங்களின் புதிய நூற்றாண்டின் முதலாண்டு மே நாளை கொண்டாடுவார்கள். எத்தனை இடங்களில் முடியுமோ அத்தனை இடங்களில் மே தினத்தை சிறப்பாக, விரிவாக கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை செய்ய இதுதான் நேரம். மே தின நிகழ்ச்சியில் பங்கு கொள்வது எத்தனை பேர் என்பது முக்கியமல்ல. பங்கு கொள்பவர்கள் வெளிக்காட்டும் ஸ்தாபன கட்டுப்பாட்டு உணர்வும், வர்க்க உணர்வும், ரஷ்ய மக்களின் அரசியல் விடுதலைக்கான ஒடுக்க முடியாத போராட்டத்திற்கு அவர்கள் காட்டும் உறுதியும்தான் முக்கியமானது. இதன் விளைவாக பாட்டாளி வர்க்க வளர்ச்சிக்கான வசதியாக சந்தர்ப்பமும், சோஷலிஸத்திற்கான வெளிப்படையான போராட்டமும் வளரும்.

**– 1900 இல் "கார்கோவில் மே தினம்' என்ற பிரசுரத்தின் முன்னுரையில் லெனின்**


படிப்பகம்

www.padippakam.com

# கனடாவில் மேதினம்

மேதினத்தை உலகுக்கு அளித்த அமெரிக்காவிலும், வளர்ச்சி அடைந்த மேற்கத்தைய நாடுகள் உட்பட உலகம் முழுவதும் இம்முறை மேதினம் பிரமாண்டமாக கொண்டாடப்பட்டுள்ளது. இதில் மற்றைய நாடுகளை விட அமெரிக்காவும், கனடாவும் வித்தியாசமான நடைமுறைகளைக் கொண்டுள்ளன. (இந்த இரு நாடுகளிலும் வாகனச் சாரதிகளின் ஆசனமும் இடது பக்கமே உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது)

தமது நாட்டில்தான் மேதினம் உருவானது என்பதால் அதில் உள்ள கோபம் காரணமாகவோ என்னவோ, அமெரிக்கா மே 1ஆம் திகதியை மற்றைய நாடுகளைப்போல விடுமுறை தினமாகத் தொழிலாள வர்க்கத்துக்கு வழங்குவதில்லை. அதேநேரத்தில், தொழிலாள வர்க்கத்துக்கு ஒரு விடுமுறை தினம் வழங்காவிடின் தொழிலாளர்கள் அதற்காகப் போராடக் கிளர்ந்தெழுவார்கள் என்ற அச்சம் காரணமாக செப்ரெம்பர் மாதத்தில் ஒரு தினத்தை 'வேலையாள் தினம்' (Labour Day) என்ற பெயரில் அறிவித்து விடுமுறை வழங்குகின்றது. அமெரிக்காவின் அயல்நாடும் அதன் நட்பு நாடுமான கனடாவும் அமெரிக்காவையே பின்பற்றுகிறது.

இருப்பினும் இந்த இருநாடுகளிலும் வர்க்க உணர்வு பெற்ற தொழிலாள வர்க்கம் பாரம்பரியமான தமது தொழிலாள வர்க்க தினமான மே 1ஆம் திகதியைக் கொண்டாடத் தவறுவதில்லை.

கனடாவின் பெரும் நகரப் பகுதியான ரொறன்ரோவில் இம்முறை மே 1,2,3ஆம் திகதிகளில் பல்வேறு இடதுசாரி அமைப்புகளும், தொழிற்சங்க அமைப்புகளும் மேதினக் கூட்டங்களை நடாத்தின.

மே 1ம் திகதி ரொறன்ரோ மாநகரசபைக்கு அருகில் உள்ள நேதன் பிலிப்ஸ் சதுக்கத்தில் சுமார் 15 வரையிலான இடதுசாரி அமைப்புகள் தனித்தனியாக தமது மேதினக் கூட்டங்களை நடாத்தின. கனடியக் கம்யூனிஸ்ட் கட்சி, ஈரானியக் கம்யூனிஸ்ட் கட்சி, ஈராக் கம்யூனிஸ்ட் கட்சி, நான்காம் அகில ரொட்ஸ்கியவாதக் குழுக்கள், வெனிசூலாவுககு ஆதரவான அமைப்பு, பழங்குடி மக்களின் உரிமைகளுக்கான அமைப்பு, கனடிய அரசின் சர்ச்சைக்குரிய பயங்கரவாதத்துக்கு எதிரான C – 51 சட்டத்தை எதிர்க்கும் அமைப்பு என அவை பல்வகைப்பட்டனவாக இருந்தன.

## ஸ்காபரோ நகரில்




வழமைபோல 'ஆக்கபூர்வ சிந்தனைக்கும் செயற்பாட்டுக்குமான தமிழ் மக்கள் அமையம்' மே 3ஆம் திகதி, ஸ்காபரோ சிவிக் சென்ரர் மண்டபத்தில் "இன்றைய சர்வதேச மற்றும் இலங்கை அரசியல் நிலைமை" என்ற தொனிப்பொருளில் மேதினக் கருத்தரங்கு ஒன்றை நடாத்தியது.

கருத்தரங்கிற்கு மூத்த தொழிற்சங்கவாதி தோழர் எஸ்.வீரசிங்கம் தலைமை வகித்தார். குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானவர்கள் இக்கருத்தரங்கில் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

கலந்து கொண்டவர்களில் க.தவபாலன், கணேஸ் ரட்ணம், சூ.மார்க், தேவன், பார்வதி கந்தசாமி, ஜேம்ஸ், மித்திரன், ரி.மகேஸ்வரராசா, எஸ்.கதிரவேலு, சி.தருமராசன், ஜோர்ச் குருஸ்சேவ், மகேந்திரன், சிவா, ஆனந்த ராம் உட்படப் பலர் சர்வதேச மற்றும் இலங்கை அரசியல் நிலபரங்கள் பற்றித் தமது கருத்துக்களை முன்வைத்து உரையாற்றினர். *

**3ம் பக்கத்தொடர்ச்சி...**

பிரித்தானியாவின் பாதையைத் தொடரப்போவதாக அறிவித்துள்ளன.

மேலும், அமெரிக்காவின் இரண்டு நெருங்கிய நேசநாடுகளான அவுஸ்திரேலியாவும், தென்கொரியாவும் கூட, இந்த வங்கியில் இணைவது குறித்துப் பரிசீலித்து வருகின்றன. அவுஸ்திரேலியா ஏற்கெனவே சீனாவுடன் உச்சகட்ட வர்த்தக உறவுகளைக் கொண்டுள்ளது. அதேபோல, தென்கொரியா அமெரிக்காவுடனும் யப்பானுடனும் செய்யும் வர்த்தகத்தின் மொத்த அளவைவிடக் கூடுதலான அளவுக்கு சீனாவுடன் வர்த்தக உறவுகளைக் கொண்டுள்ளது.

அதுமாத்திரமின்றி, உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பனவும் சீனா தொடங்கியுள்ள புதிய வங்கியுடன் ஒத்துழைக்கப் போவதாக அறிவித்துள்ளன.

இத நடவடிக்கைகளைப் பார்க்கும் போது, இந்த நாடுகள் கடந்த காலங்களைப் போல அமெரிக்கா மீது மட்டும் நம்பிக்கை வைக்கவோ, அதைச் சார்ந்திருக்கவோ விரும்பவில்லை அல்லது தயாரில்லை என்பது புலனாகின்றது. இதன்மூலம் அமெரிக்கா உலக அரங்கில் தனிமைப்படக்கூடிய நிலைமை உருவாகலாம்.

அமெரிக்காவின் இந்த நிலைமைக்கு ஜனாதிபதி பராக் ஒபாமா பின்பற்றும் கொள்கைகளே காரணம் என, அவரது அரசியல் எதிரிகளான குடியரசுக்கட்சி அரசியல்வாதிகள் சாடி வருகின்றனர்.


இது ஒருபுறமிருக்க, உலகின் வல்லமைமிக்க நாடுகள் எல்லாம் சீனாவின் உதவியையும், தயவையும் வேண்டி நிற்கையில், இலங்கையில் புதிதாக ஆட்சிக்கு வந்துள்ள மேற்கத்தைய சார்பு – இந்திய சார்பான ரணில் – மைத்திரி தலைமையிலான அரசாங்கம், இலங்கை சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து தன்னலமில்லாத உதவியைச் செய்து வரும் சீனாவை உதாசீனப்படுத்தி வருகின்றது. இது இலங்கை அரசின் ஏகாதிபத்திய சார்பு அழிவுப்போக்கையே எடுத்துக் காட்டுகிறது.

**"கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் இருக்கும்வரை சீன மக்களால் சகலவிதமான அற்புதங்களையும் நிகழ்த்த முடியும்" – மாஓ** *


படிப்பகம்

www.padippakam.com

# இலங்கையின் அரசியல் சாசனத்தில் ஜனாதிபதி ஒருவரின் வகிபாகம்



இலங்கை வரலாற்றில் ஜனாதிபதிகளாக வில்லியம் கோபல்லவாவிலிருந்து இன்றைய மைத்திரிபால சிறிசேன வரை பலர் வந்து போனாலும் எமக்கு நினைவுக்கு வருபவர்கள் இருவர். ஒருவர் ஜே.ஆர். ஜெயவர்த்தனா, மற்றையவர் மஹிந்த ராஜபக்ஷா. முதலாமவர், பாராளுமன்ற இறைமையைப் பாதிக்கக்கூடிய நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையைக் கொணர்ந்தவர். தன்வசம் அதிகப்படியான அதிகாரங்களைக் குவித்து வைத்திருக்கும், சட்டத்திற்கு அப்பாற்பட்ட, ஜனநாயக விரோதமான, நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சிமுறைமையை 1978இல் அறிமுகப்படுத்தியவர். பாராளுமன்றத்தில், தட்டிக்கேட்க ஆளிருந்தும் தட்டிக்கேட்க முடியாத நிலைமையை உருவாக்கிச் சென்றவர்.

இரண்டாமவரோ, இதே அதிகாரங்களைப் பயன்படுத்தி மூன்றாவது தடவையாகவும் பதவிக்கு வர முயன்று தோற்றவர். ஆனாலும் கெட்ட போரினை வேருடன் சாய்த்த ஆளுமைக்குரியவர். சொந்த நாட்டை மட்டுமல்லாது அந்தப் பிராந்தியத்தையே வெளிநாட்டு சக்திகள் மூலம், எதிர்காலத்தில் துண்டாடப்படுவதிலிருந்து தடுத்து நிறுத்தியவர்.

சாசனரீதியாக நோக்கின், இலங்கையின் முதலாவது அரசியல் யாப்பு கோல்புறூக் அரசியல் சீர்திருத்தம். 1833இல் உருவாக்கப்பட்ட இச்சாசனத்திலேயே தேசாதிபதி முறையும் உருவாகியது. அது, 1947இல் வந்த சோல்பரி யாப்பில் மகாதேசாதிபதியாகி, 1972இல் குடியரசு ஜனாதிபதியாகியது. தேசாதிபதி, மகாதேசாதிபதி ஆகியோர், ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பாலுள்ள பிரித்தானியாவின் முடியினால் நியமிக்கப்பட்டு, பிரித்தானியாவின் நலன்களைப் பேணிப்பாதுகாத்து வந்தனர். சுருங்கக்கூறின் பிரித்தானியாவின் கையில் நாணயக்கயிறு.

**ஆனந்ததேவன்**

1972இலேயே பிரதமரினால் பெயர் குறிப்பிடப்பட்டு நியமிக்கும் ஜனாதிபதி முறைமைக்கு மாறுகிறது. இந்த அரசியல் யாப்பில் பிரதமரே அதிகாரம் வாய்ந்த சக்தியாகத் திகழ்ந்தார். ஜனாதிபதியின் பதவிக்காலமோ நான்கு ஆண்டுகள் மட்டுமே. ஜனாதிபதி இல்லாதவிடத்து பதில் ஜனாதிபதியை நியமித்தல், ஜனாதிபதியைப் பதவி நீக்கம் செய்ய வேண்டுமாயின், பிரதமரினால், தேசிய அரசுப்பேரவையின்(முன்னைய பாராளுமன்றம்) 50வீதமான உறுப்பினர்களின் கையொப்பத்துடன் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்துடன் பதவிநீக்கம் செய்யமுடியும்..

ஜனாதிபதியின் அதிகாரங்கள், தேசிய அரசுப்பேரவையைக் கூட்டுதல், கலைத்தல், ஒத்திவைத்தல், சிம்மாசனப் பிரசங்கத்தை நிகழ்த்துதல், அவசரகால நிலையில் அவசரகால சட்டங்களை இயற்றுதல், போர்ப் பிரகடனம் செய்தல், சமாதானம் செய்தல், ஏனைய அமைச்சர்களையும், முப்படைத் தளபதிகளையும், அரச உயரதிகாரிகளையும் உயர்நீதிமன்ற, மேன்முறையீட்டு நீதிபதிகளையும் நியமித்தல் போன்றவையே. இவையனைத்தையும் இவரால் தன்னிச்சையாக மேற்கொள்ள முடியாது. அது மட்டுமல்ல நிறைவேற்றப்படும் அதிகாரங்களுக்கு கையொப்பமிடும் அதிகாரமும் இவருக்கில்லை. சட்டங்களனைத்தும் சபாநாயகரின் சான்றுரையுடனேயே அமுலுக்கு வரும்.

1972இல் பெயரளவிற் காணப்பட்ட ஜனாதிபதியை மிகவும் சக்திவாய்ந்த நபராக, 1978இல் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாக ஜே.ஆர். மாற்றினார். அன்றிலிருந்து இன்றைய 19ஆவது திருத்தச் சட்டம் வரை அதுவே கோலோச்சியது. இவரின் பதவிக்காலம் ஆறு ஆண்டுகளாகும். இவரே அரசின் தலைவராகவும், அமைச்சரவையின் தலைவராகவும், முப்படைகளின் தலைவராகவுமிருப்பார். இவரது அதிகாரங்களாக பாராளுமன்றத்தைக் கூட்டுதல், கலைத்தல், ஒத்திவைத்தல், சிம்மாசனப் பிரசங்கத்தை நிகழ்த்துதல், அவசரகால வேளையில்


படிப்பகம்

www.padippakam.com

சட்டமூலங்களை இயற்றுதல், தான் விரும்பிய சட்டமூலங்களை பாராளுமன்றம் நிராகரித்தாலும் சர்வஜன வாக்கெடுப்பிற்கு விடுதல், சட்டமா அதிபர்களை நியமித்தல், அமைச்சுக்களை ஒதுக்குதல், அமைச்சர்களை நீக்குதல், மாற்றுதல், அரச உயரதிகாரிகளை, வெளிநாட்டுத் தூதுவர்களை நியமித்தல், உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமித்தல் போன்றவை. இவையனைத்தையுமே பிரதமரின் ஆலோசனை எதுவுமின்றி தன்னிச்சையாகவே மேற்கொள்வார்.

ஜனாதிபதி தவறிழைக்கும் பட்சத்தில் அவருக்கெதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடர முடியாது. அவ்வாறு தொடரும் பட்சத்தில் சட்டமா அதிபரையே பிரதிவாதியாகக் குறிப்பிடப்படல் வேண்டும். ஜனாதிபதியைப் பதவி நீக்கம் செய்ய வேண்டுமாயின் மூன்றிலிரண்டு பெரும்பான்மை அல்லது ஐம்பது வீதத்திற்கு மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பத்துடன் சபாநாயகர் மூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட குற்றப்பிரேரணை மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படல் வேண்டும். நிறைவேற்றப்பட்ட தீர்மானமோ உச்சநீதிமன்றத்தால் விசாரணை செய்து அங்கீகரிக்கப்படல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம், பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படல் வேண்டும். இவ்வாறானதொரு நீண்ட, இடியப்பச் சிக்கலான நடைமுறை ஒழுங்கினூடாகவே ஜனாதிபதியைப் பதவி நீக்கம் செய்ய முடியும்.


ஆனால் தற்போதைய 19ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம், ஐம்பது வீதமான உறுப்பினர்களின் கையொப்பத்துடன் அவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து, மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் பதவி நீக்கம் செய்ய முடியும். ஜனாதிபதி உடல், உளரீதியாக தகுதியின்றிக் காணப்படின் பிரதமர், சபாநாயகர், பிரதம நீதியரசர் அடங்கிய குழுவினால் ஏகமனதாக அவரைப் பதவி நீக்கம் செய்ய முடியும். அவர் இரண்டு தடவைகளுக்கு மேல் பதவி நீடிப்புச் செய்ய முடியாது. ஜனாதிபதி சுகவீனமுற்றால் சபாநாயகர் கடமையாற்றுவார். அவருமில்லாத பட்சத்தில் பிரதிசபாநாயகர் பொறுப்பேற்பார். ஜனாதிபதியின் பதவிக்காலம் ஆறு வருடங்களிலிருந்து ஐந்து வருடங்களாக நறுக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தின் ஆயுட்காலமும் ஐந்து வருடங்கள்தான். பாராளுமன்றத்தை நான்கரை வருடங்களுக்கு முன் கலைக்க முடியாது. அதுவும் பாராளுமன்றத்தின் சம்மதத்துடனேயே செய்ய முடியும். அமைச்சுக்களின் நியமனமும் கூட பாராளுமன்றத்தின் சம்மதத்துடனேயே செய்தல் வேண்டும்.

சுயாதீன ஆணைக் குழுக்களுக்கான அங்கத்தவர்களின் நியமனம், ஜனாதிபதியிடமிருந்து தற்போது அரசியல் நிர்ணய சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 19ஆவது திருத்தச் சட்டமூலத்தின் பிரகாரம், அவர் பாராளுமன்றத்திற்கு பொறுப்புக் கூற வேண்டியவராகவுள்ளார். அவருக்கெதிராக அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தொடர வழி பிறந்துள்ளது. இது ஜனநாயகத்தின்பாற்பட்டது என்பதில் சந்தேகமில்லை.

19ஆவது திருத்தச் சட்டத்தைப் பொறுத்தவரை, நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையை வேருடன் சாய்ப்பதற்குப் பதில், இடைஞ்சல் தரும் மரத்தின் சில கிளைகளை மட்டும் நறுக்கியுள்ளனர் என்று கொள்ளலாம். சிறுபான்மை பலத்தையுடைய கட்சி அரியணையிலும், பெரும்பான்மைப் பலத்தையுடைய கட்சி எதிரணியிலும் வீற்றிருக்கும் ஜனநாயக மோசடிக்கும், யாப்பைச் செல்லாக்காசாக்கி, தேர்தலொன்று நிகழாமலேயே, குறுக்கு வழியில், ரணில் பிரதமர் ஆசனத்தைக் கைப்பற்றிய ஜனநாயக ஊழலுக்கும் மத்தியில் இது நிகழ்ந்துள்ளமை ஆச்சரியமே. ஒரு வேளை, ஐக்கிய தேசியக் கட்சி எதிரணியிலும், அக்கட்சியைச் சேர்ந்தவர் ஜனாதிபதியாகவும் இருந்திருந்தால் இத்தகைய மசோதாவை அனுமதித்திருப்பார்களா என்பது சந்தேகமே.

எது எவ்வாறிருப்பினும் கட்சிகளின் சுயநலன்களிற்கப்பால் ஜனநாயகப் பாதையில் சில சிரமதானங்கள் நடைபெற்றிருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. எல்லாமே எழுதப்பட்ட சட்டங்களை நேர்மையாகப் பின்பற்றுவதிலேயே தங்கியிருக்கிறது. *

## மேதினம் குறித்து எங்கெல்ஸ்



“உழைக்கும் வர்க்கத்தின் பிரதான விருப்பம் சமூக மாற்றத்தின் மூலம் வர்க்கப் பாகுபாடுகளை அழித்தொழிப்பது, மற்றும் உலகம் முழுவதும் எல்லா மக்களுக்கும் அமைதியை ஏற்படுத்துவது ஆகும். மேதின ஆர்ப்பாட்டங்கள் எட்டு மணி நேர வேலை நாளுக்காக மட்டுமல்லாமல் மேற்கூறிய விடயங்களுக்கும் பயன்பட வேண்டும்”


## மே தினக்கவிதை

உலகின்
படைப்புகளெல்லாம்
உழைப்பின்
சிதறல்களே..!
உலகத்திலிருந்து
உழைப்பை
கழித்தால்
வெறும்
மண்ணும் கல்லும்
தான் மிச்சம்..!
அதனால்,
உழைப்பாளிகளை
மதிப்போம்..!
உலகத்தை காப்போம்.!


படிப்பகம்

www.padippakam.com

# மேதின வரலாறு




○ 19-ம் நூற்றாண்டில் அமெரிக்காவில் தொழிலாளர்கள் முதலாளிகளால் ஒரு நாளைக்கு 12 முதல் 18 மணி வரை வேலைவாங்கப்பட்டு கடுமையாகக் கசக்கிப் பிழியப்பட்டார்கள். இந்த நிலைமைக்கு எதிராக ஏராளமான போராட்டங்களும், வேலை நிறுத்தங்களும் அடிக்கடி நடந்து வந்தன.

○ இந்த நிலைமையில் 1884 ஒக்ரோபர் 7ல் சிக்காக்கோ நகரில் கூடிய அமெரிக்க – கனடிய தொழிற்சங்கப் பிரதிநிதிகள் நடாத்திய மாநாட்டில், ஒருநாளில் 8 மணி நேரமே சட்டபூர்வமான வேலை நேரமாக இருக்க வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றினர்.

○ 1886 மே 1-ம் திகதி 8 மணி வேலை நேரத்தை வலியுறுத்தி அமெரிக்கா முழுவதும் 3 இலட்சம் தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் குதித்தனர். இவர்களில் 40,000 பேர் சிக்காக்கோ நகரத் தொழிலாளர்கள்.

○ மே 3-ம் திகதி சிக்காக்கோ மெக்கார்மிக் ரீப்பர் வேர்க்ஸ் (McCormick Reaper Works) கொம்பனியில் வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்கள் மீது பொலிசாரும், காடையர்களும் இணைந்து நடாத்திய தாக்குதலில் இரண்டு தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர்.

○ அந்தத் தாக்குதலைக் கண்டித்து மே 4ஆம் திகதி அங்குள்ள வைக்கோல் சந்தைச் சதுக்கத்தில் (Haymarket Square) தொழிலாளர்கள் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

○ அந்த ஆர்ப்பாட்டத்தில் இனந்தெரியாத நபரொருவர் எறிந்த கைக்குண்டினால் இராணுவ அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டார்.

○ அதைத் தொடர்ந்து நடந்த மோதலில் 7 பொலிசாரும், 4 தொழிலாளர்களும் கொல்லப்பட்டனர்.

○ முதலாளிகள் பொலிசாரின் உதவியுடன் வரலாறு காணாத அடக்குமுறையை தெரிலாளர்கள் மீது கட்டவிழ்த்துவிட்டனர். தொழிலாளர் தலைவர்கள் 4 பேரை தூக்கிலிட்டுக் கொன்றனர்.


○ அமெரிக்கத் தொழிலாளர்களின் தொடர்ச்சியான போராட்டமே பின்னர் உலகம் முழுவதும் 8 மணிநேர வேலை உரிமைக்கு வித்திட்டது.

○ மார்க்சிச மூலவர் கார்ல் மார்க்சின் மறைவின் பின்னர், அவரது இணைபிரியாத் தோழர் பிரெடரிக் ஏங்கெல்ஸ் அவர்கள் காலத்தில் அமைக்கப்பட்ட இரண்டாவது அகிலம் 1889இல் பாரிசில் கூடிய போது, சிக்காக்கோ தொழிலாளர்களின் போராட்டத்தை ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டதுடன், மே 1ஆம் திகதியை தொழிலாளி வர்க்கம் தமது தொழிற்சங்க – அரசியல் உரிமைகளுக்குக் குரல் கொடுக்கும் நாளாகப் பிரகடனம் செய்தது.

○ அன்றிலிருந்து உலகம் முழுவதும் மே 1ஆம் திகதி தொழிலாளர் தினமாக – மேதினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

*(இப்பிரசுரம் கனடாவில் மே 3ந் திகதி 'ஆக்கபூர்வமான சிந்தனைகளுக்கும் செயற்பாடுகளுக்குமான தமிழ் மக்கள் அமையம்' நடாத்திய மேதினக் கருத்தரங்கின் போது வெளியிடப்பட்டதாகும்)* *

# அறியப்படாதவர்கள் நினைவாக



இலங்கையில் 30 வருடங்களாக நடைபெற்று வந்த கொடூரமான போரை முடிவுக்கு கொண்டுவந்ததின் 6ஆவது ஆண்டை நினைவுகூருகின்ற இவ்வருட (2015) மே மாதத்தில், அந்தப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக செயலாற்றிய அத்தனை சக்திகளுக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன், அந்தப் போர் காரணமாக அநியாயமாக மாண்டுபோன பல்லாயிரக்கணக்கான தமிழ் – சிங்கள – முஸ்லீம் மக்களுக்கும், சர்வதேச நாடுகளைச் சேர்ந்த பிரசைகளுக்கும் 'வானவில்' தனது ஆழ்ந்த நினைவஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கிறது.

**– ஆசிரியர் குழு**

---

**முன்பக்கத்தொடர்ச்சி...**

காலத்தில் வாக்குறுதி அளித்தாரோ, அந்த நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தியே ஐ.தே.க அரசாங்கம் அமைய வழி செய்ததோடு, ரணிலை பிரதமராகவும் முடிசூட்டி வைத்தார். இதனால் உலகில் எங்குமே நடைபெறாத வகையில், 225 உறுப்பினர்கள் கொண்ட பாராளுமன்றத்தில் வெறுமனே 48 உறுப்பினர்கள் கொண்ட ஐ.தே.க. அரசாங்கம் நடாத்துகிற விந்தை நடைபெறுகிறது. சொல்லப்போனால் இன்றைய அரசாங்கம் செத்துப்போன ஜனநாயகத்தின் வயிற்றில் பிறந்த, 'தாயைக் கொல்லி'க் குழந்தையாகக் காட்சி அளிக்கிறது.

அதன் பின்னர் என்ன நடந்தது? 100 நாள் வேலைத்திட்டம்,


படிப்பகம்

www.padippakam.com

நல்லாட்சி என்று எல்லாம் கூறியவர்கள், தமது அரசியல் எதிரிகளை ஒழித்துக் கட்டுவதற்காக, பொய்யான குற்றச்சாட்டுகளைச் சுமத்துவதிலும், கைது நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் காலத்தைக் கடத்துகின்றனர். அதுமட்டுமல்ல.

புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர் முன்னைய அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட சகல அபிவிருத்தி நடவடிக்கைகளும் கைவிடப்பட்டுள்ளன.

நிதி நெருக்கடி ஏற்பட்டு, திறைசேரி காலியாகி, அரச ஊழியர்களுக்கே சம்பளம் கொடுக்க முடியாத நிலை தோன்றியுள்ளது.

நீண்டகால அனுபவம் மிக்க அரச நிர்வாகிகள் பழிவாங்கப்பட்டு, பதவிகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளதால், அரச நிர்வாகம் முடங்கிப்போய் உள்ளது.

புலிப் பயங்கரவாதிகள் மற்றும் பிரிவினைவாதிகள் சம்பந்தமாக மெத்தனப்போக்கைக் கடைப்பிடிப்பதால், உள்நாட்டில் பதுங்கியிருந்த புலிகளின் மிச்சசொச்சங்களும், புலம்பெயர் புலிகளும் உற்சாகமடைந்து, தமது மீள் உருவாக்கத்தை ஆரம்பித்துள்ளனர்.

நீதித்துறை, பொலிஸ்துறை மற்றும் ஆயுதப்படைகள் அரசியல்மயப்படுத்தப்படுகின்றன.

இலங்கையின் நெருக்கடியான காலங்களில் தன்னலம் பாராது உதவி புரிந்த சீனா, ரஸ்யா போன்ற உலகின் பலம் வாய்ந்த நாடுகள் ஒதுக்கப்பட்டு, மேற்கத்தைய ஏகாதிபத்திய சக்திகளுக்கு ஆதரவான வெளிநாட்டுக் கொள்கை பின்பற்றப்படுகிறது.

இப்படி இன்னும் பல.

ஐ.தே.க. அரசாங்கம் பின்பற்றும் இத்தகைய கொள்கைகளை இலங்கை மக்கள் ஒருபோதும் ஏற்றுக் கொண்டதில்லை. அதனால்தான் 1956, 1970, 2004 ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களில் ஐ.தே.க. ஆட்சிக்கு வராமல் மக்கள் அதனை விரட்டியடித்தார்கள். இப்பொழுது கூட அது மக்கள் ஆணை பெறாமல் கபடத்தனமான முறையிலேயே தனது அசிங்கமான தலையை மீண்டும் தூக்கியுள்ளது.

எனவே, இந்த மக்கள் விரோத, மோசடித்தனமான அரசாங்கத்தை விரைவில் ஆட்சியை விட்டு விரட்ட வேண்டும் என்ற அவா மக்கள் மத்தியில் பெரிய அளவிலும், வேகமாகவும் உருவாகி வருவதை அவதானிக்க முடிகிறது. இந்த உண்மையை, முன்னைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை விரட்ட வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காக ஐ.தே.கவுடன் கைகோர்த்த இன்றைய ஜனாதிபதி மைத்திரியாலோ அல்லது முன்னைய ஜனாதிபதி சந்திரிகாவாலோ கூட புறக்கணிக்க முடியாது உள்ளது. சாதாரணமாக கிராம மக்கள் சொல்வார்கள், “சரி, போனது போகட்டும், இனியாவது நல்லது நடக்கிறதுக்கு வழி பார்ப்போம்” என.

அதுபோல, மைத்திரியும், சந்திரிகாவும் குறுகிய அரசியல் நோக்கத்துக்காக, செய்யக்கூடாததைச் செய்து, ஐ.தே.கவை ஆட்சிக்குக் கொண்டு வந்த தவறுக்கு பிராயச்சித்தம் செய்வதற்கான வழிவகைகள் குறித்து இப்பொழுது சிந்திப்பது அவசியம். எப்படியும் ஐ.தே.கவை ஆட்சி அதிகாரத்திலிருந்து விரட்டுவதற்கான வழிவகைகளை அவர்கள் மேற்கொள்ள வேண்டும்.

அதற்கு அவர்கள் செய்ய வேண்டியது யதார்த்தபூர்வமான, நடைமுறைச் சாத்தியமான நடைமுறைகளை மேற்கொள்வதுதான். அதில் முதலாவதும் முக்கியமானதுமான விடயம், என்ன விலை கொடுத்தேனும், விட்டுக்கொடுப்புச் செய்தேனும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒற்றுமையைக் குலைய விடாமல் காப்பது. இரண்டாவது விடயம், முற்போக்கு சக்திகள், ஜனநாயக சக்திகள், தேசபக்த சக்திகள் கொண்டு அமைக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கட்டமைப்பைத் தொடர்ந்தும் பேணுவது.

இந்த விடயத்தில் ஏற்கெனவே 1977இல் ஒரு கசப்பான அனுபவம் இருக்கின்றது. அன்று சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், இடதுசாரிக் கட்சிகளுக்கும் இடையில் பிளவு தோன்றியதால்தான், ஐ.தே.க. அமோக வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தது என்பதை ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. இன்றும் அப்படியொரு நிலையை உருவாக்கத்தான் ஐ.தே.க மனப்பால் குடிக்கிறது.

இந்த விடயத்தை சுதந்திரக் கட்சியின் மகிந்த அணியும் கவனத்தில் கொள்வது அவசியமானது. ஏனெனில் ஒரு கைவீசி ஒலி எழும்பாது.

ஏற்கெனவே சுதந்திரக் கட்சியின் இன்றைய தலைமைப் பதவியை வகிக்கும் ஜனாதிபதி மைத்திரிக்கும், முன்னாளைய ஜனாதிபதியும், சுதந்திரக் கட்சியின் போசகர்களில் ஒருவராகப் பதவி வகிக்கும் மகிந்தவுக்கும் இடையில் தமது முரண்பாடுகளைச் சீர்செய்வதற்கான பேச்சுவார்த்தை ஒன்று நடைபெற்றுள்ளது. இது ஒரு நல்ல சகுனமும், ஆரம்பமும் ஆகும். இந்தப் பேச்சுவார்த்தையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவையும் உள்ளடக்கி அதைத் தொடர வேண்டும். அதன் மூலம் நல்லதொரு நிலைமையை உருவாக்கலாம்.

அதன் மூலமே எமது அருமையான தாய்நாட்டைத் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவருவதற்கு வியூகம் அமைத்துச் செயற்படும், ஏகாதிபத்திய சக்திகளின் நோக்கங்களையும், அதற்கு உதவியாகச் செயற்பட்டு தேசத்துரோக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் ஐ.தே.கவையும் தோற்கடிக்க முடியும்.

தனிநபர் நலன்களை விட, தேசத்தின் நலனை முன்னிறுத்துவதே இன்றைய முதல் தேவையாகும். *


படிப்பகம்

www.padippakam.com

'Vaanavil' is a registered member of the National Ethnic Press and Media Council of Canada
வானவில்

# ஜேர்மன் பாசிசத்துக்கு எதிரான ரஸ்யாவின் 70ஆவது வெற்றிவிழாவை மேற்கத்தியத் தலைவர்கள் புறக்கணிப்பு!

இரண்டாம் உலக மகாயுத்தத்தில் ஹிட்லரின் நாஜி ஜேர்மனியின் பாசிசத்தைத் தோற்கடித்ததின் 70ஆவது ஆண்டு நிறைவை நினைவுகூர்ந்து இந்த மே மாதத்தில் உலகம் முழுவதும் உள்ள மக்கள் கொண்டாட்டங்களை நடாத்தி வருகின்றனர்.

இவற்றில் பிரதானமான கொண்டாட்டம் ரஸ்யத் தலைநகர் மொஸ்கோவில் மிகவும் கோலாகலமாக நடந்துள்ளது. ரஸ்யாவின் வலிமையைக் காட்டும் பிரமாண்டமான இராணுவ அணிவகுப்புகளும், அந்தப் போரில் உயிரிழந்த லட்சக்கணக்கான படை வீரர்கள், பொதுமக்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகளும், கலை கலாச்சார வைபவங்களும், வாண வேடிக்கைகளும் என, மொஸ்கோ நகரம் கொண்டாட்டங்களில் மூழ்கி இருந்ததை ஊடகங்கள் உலகிற்கு எடுத்துக் காட்டின.

ரஸ்யாவில் சோசலிச அமைப்பு முறை முதலாளித்துவவாதிகளால் 1990இல் தகர்த்தெறியப்பட்டுவிட்டாலும், அந்த நாட்டின் புகழ்பூத்த மக்கள் தமது நாட்டைப் பாசிச அபாயத்திலிருந்து காத்த கம்யூனிஸ்ட் கட்சிக்கும், அந்தக் காலகட்டத்தில் சோவியத் நாட்டை வழிநடாத்திய ஸ்டாலினுக்கும் நன்றி தெரிவிக்கும் முகமாக, அரிவாள் சுத்தியல் பொறித்த செங்கொடிகளையும், ஸ்டாலின் படங்களையும் ஊர்வலமாக எடுத்துச் சென்றதையும் தொலைக்காட்சிகளில் பார்க்க முடிந்தது.

ஹிட்லரின் பாசிசத்தைத் தோற்கடித்து, அவனுக்குச் சமாதி கட்டியதில் சோவியத் மக்கள் வகித்த பாத்திரம்தான் ஈடு இணையில்லாததும், தீர்க்கமானதும் ஆகும். இந்த உண்மையை மறைப்பதற்காக உலக ஏகாதிபத்திய சக்திகள் பலவிதமான பிரயத்தனங்களை எடுத்தன. பாசிச எதிர்ப்புப் போராட்டத்தில் சோவியத் யூனியன் வகித்த பிரதான பாத்திரத்தை மறைப்பதற்காகவே கடந்த அரை நூற்றாண்டாக ஏராளமான ஆங்கிலத் திரைப்படங்கள் எடுக்கப்பட்டன. பலவிதமான புத்தகங்கள் வெளியிடப்பட்டன. ஏகாதிபத்திய சக்திகள் சூரியனைக் கையால் மறைக்க முற்படுவது போல இத்தகைய நடவடிக்கைகளை எடுக்க முற்பட்டாலும், காரிருளை விலக்கி வெளியே வரும் சூரியன் போல உண்மை வெளிச்சத்துக்கு வந்துகொண்டே இருக்கின்றது.

உண்மையில் அமெரிக்கா, பிரித்தானியா போன்ற ஏகாதிபத்திய நாடுகள் ஹிட்லரின் பாசிசத்துக்கு எதிரான போரில் ஈடுபட்டதே ஒரு விபத்துத்தான். ஹிட்லர் உலகைக் கபளீகரம் செய்யும் தனது முயற்சியை ஆரம்பித்த போது, உலகின் முதலாவது சோசலிச நாடான சோவியத் யூனியனையே அவன் தாக்கப் போகிறான் என நினைத்து அவனுக்குக் கொம்பு சீவி விடவே இந்தச் சக்திகள் முயன்றன. ஆனால் அவன் இவர்கள் எதிர்பாராத வகையில் ஐரோப்பாவில் இருந்த இவர்களது நேசநாடுகளையே முதலில் தாக்கி அவற்றை ஒன்றன் பின் ஒன்றாகக் கைப்பற்றிக் கபளீகரம் செய்ய ஆரம்பித்த பின்னர்தான், தவிர்க்க முடியாமல் அமெரிக்காவும், பிரித்தனியாவும் சோவியத் யூனியனுடன் இணைந்து ஹிட்லருக்கு எதிராகப் போராட வேண்டிய நிலை உருவானது.

இருப்பினும் பாசிச ஜேர்மனியைத் தோற்கடித்து, அந்த நாட்டுக்குள்ளேயே ஹிட்லரால் கொலைக்களங்களில் அடைத்து வைத்திருந்த பல்லாயிரக்கணக்கான யூத மக்களையும், பிற மக்களையும் விடுவித்து, ஹிட்லர் என்ன ஆனான் என்று தெரியாத அளவுக்கு அவனது வரலாற்றையே முடித்து வைத்த பெருமை ஸ்டாலின் தலைமைதாங்கிய சோவியத் செஞ்சேனைக்கே உரியது. ஜேர்மானிய பாசிசத்தைத் தோற்கடித்து உலகைக் காப்பாற்றிய அந்த வீரதீரப் போரில் 10 மில்லியன் சோவியத் செஞ்சேனைப் படைவீரர்களும், 15 மில்லியன் சோவியத் மக்களும் தம் இன்னுயிரைத் தியாகம் செய்தனர் என்பதிலிருந்தே சோவியத் நாடு மனித குலத்துக்கு எத்தகைய பாரிய பங்களிப்பைச் செய்தது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

சோவியத் யூனியன் வகித்த இந்த வெற்றிப் பாத்திரத்தை வருடா வருடம் சோவியத் மக்கள் கொண்டாடி வருகின்றனர். முன்னைய காலங்களில் இந்த வெற்றி விழாக் கொண்டாட்டங்களில் அமெரிக்க, பிரித்தானிய, ஜேர்மன் அரச தலைவர்கள்



கலந்துகொள்வது வழமை. ஆனால் உக்ரேனில் மேற்கத்தைய சார்பு அரசுக்கெதிராகப் போராடி வரும் கிளர்ச்சிப் படைகளுக்கு ரஸ்யா உதவி வருகிறது என்று காரணம்காட்டி, அந்தத் தலைவர்கள் இம்முறை 70ஆவது வெற்றிவிழாக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளாது புறக்கணித்துள்ளனர். அமெரிக்கா மிகக்குறைந்த மட்டத்தில் தனது தூதுவரை மட்டுமே கலந்து கொள்ள அனுப்பி வைத்தது. பிரித்தானியா இரண்டாம் உலக யுத்த காலத்தில் தனது நாட்டின் பிரதமராக இருந்த வின்சன் சேர்ச்சிலின் பேரன் ஒருவரை அனுப்பி வைத்தது.

ஆனாலும் என்ன? இந்த விழாவில் 130 கோடி சீன மக்களின் தலைவரான அந்த நாட்டின் இன்றைய ஜனாதிபதி சீ ஜின் பிங் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். அதேபோல, 100 கோடி இந்திய மக்களின் ஜனாதிபதியான பிரணாப் முகர்ஜியும் கலந்துகொண்டார். அதன் மூலம் இந்த வெற்றி விழாவில் உலக சனத்தொகையின் ஏறத்தாழ மூன்றில் ஒரு பகுதி மக்கள் பிரதிநிதித்துவம் செய்யப்பட்டுள்ளனர்.

அதேநேரத்தில் இந்த வெற்றிவிழாக் கொண்டாட்டத்தில் உரையாற்றிய ரஸ்ய அதிபர் புடின், மேற்கு நாடுகளின் தலைவர்கள் இந்த விழாவைப் புறக்கணித்ததானது, சர்வதேச நடைமுறைகளையும், நட்புணர்வையும் மீறுவதாக உள்ளது எனத் தெரிவித்துள்ளதுடன், அவர்களின் இந்த நடவடிக்கை நாடுகள் மீது பலப்பிரயோகம் செய்யும் முயற்சி என்றும் சாடியுள்ளார். *


படிப்பகம்